தென்மொழி

# இன்றை உலகம் புரட்சி உலகம்!

இன்றை உலகம் புரட்சி உலகம்!
எழுக விடிவை நோக்கியே!
குன்றை இடிக்கும் ஆற்றல் மறவர்
கொள்கைக் கொடியைத் தூக்கியே!

இன்றை இளைஞர் புதுமை வீரர்!
எழுக துயிலை நீக்கியே!
ஒன்றை நினைக, உரிமை வெல்க,
உணர்வை நெஞ்சில் தேக்கியே!

நீண்ட நெடிய அடிமைத் தன்மை
நிலவும் நிலையைப் போக்கவே,
மூண்ட உரிமைக் கனலை உணர்க!
முனைக, விளைவை ஊக்கவே!

வாட்டும் வறுமை, ஆட்சிக் கொடுமை,
வாழ்க்கை நலிவில் நடப்பதோ?
கேட்டும். பார்த்தும் கிளர்ச்சி யின்றிக்
கீழ்மை யுற்றுக் கிடப்பதோ?

பொங்கும் வளமை! பொலிக பொதுமை!
பூக்கும் உரிமை விரைவிலே!
எங்கும் புதுமை! எவரும் சமன்மை!
எதுவும் இல்லை மறைவிலே!



வடி : 20
ல : 7
ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்
விலை
1-25 உருபா

# நமக்கு வந்த மடல்கள்.

0 : 993 । (ஆசிரியர் குறிப்பு : கீழுள்ள மடல், ஐரோப்பியச் செலவில் இணைந்து வந்த அந்தப்(!) பேராசிரியர், அண்மையில் நமக்கு எழுதிய மடலாகும். சென்ற இதழ்த் தென்மொழியில் 9-ஆம் பக்கம் வெளிவந்த 'பேராசையாசிரியரின் காட்டிக்கொடுக்கும் கயமைக் குணம்' என்னும் செய்தியறிவிப்பைக் கண்டு, அவர் நம்மை' எச்சரித்து எழுதிய மடல் இது. பொருமை கொண்ட ஒருவர், அவர் எத்தகைய படிப்பறிவு உள்ளவராக, பார்ப்பதற்கு எவ்வளவு மதிக்கத்தகு போலித்தோற்றம் உடையவராக இருந்தாலும், அவரின் உள்ளமும் அறிவும் எத்துணையளவு கீழ்மையுற்றுவிடும் என்பதற்கு இம் மடல் மிகப் பொருத்தமான சிறந்த ஒரு சான்றாகும். அவருடைய பொருமை உணர்வும், உள்ளக் கீழ்மையும், புறங்கூறிப் பொய்த்து வாழும் தன்மையும் அவர் பயன்படுத்திய சொற்களில் நன்கு பளிச்சிடுகின்றன. பொது நிலையில் ஈடுபட்டிருப்பவர்கள், இத்தகைய புரையறிவும், புன்மை உணர்வும் உள்ளவர்களிடம் எந்த அளவில் எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் இம்மடல் இங்கு வெளியிடப்படுகின்றது. தென்மொழி வரலாற்றில் இவர் போலும் ஓரிருவர் உண்டு. ஆனால், 'நன்றாற்றலுள்ளும் தவறுண்டு அவரவர் பண்பறிந்து ஆற்றாக்கடை' என்னும் கூற்றை நாம் நன்கு விளங்கிக் கொள்ளக் காரணியமாய் இருந்தவர்களுள் இவர் தலையாயவர். பொதுப்பண்பு கருதி அவர் பெயரை இதுவரை வெளியிடாதது போலவே இங்கும் வெளியிடவில்லை। அவர் மடலிலும் அதைத் தொடரும் ஓரிரு மடல்களிலும் உள்ள வடசொற்கள் நீக்கப்பெறவில்லை.)

## அறிவிப்பு

துரைமாணிக்கம் என்ற திரு. பெருஞ்சித்திரன் காண்க. பொறாமையும் பொச்சரிப்புமே குருதியாகக் கொண்டு உண்மையைப் போலப் பொய்யுரைகளைக் கக்கிக் கொண்டு தனித்தமிழின் பெயரால், தமிழன்பர்களின் பணத்தைத் தண்டி வயிறு வளர்த்து மூன்று இதழ்களை நடத்திக் கொண்டிருக்கும் நீர், தமிழ் மக்களின் நலத்திற்குப் பாடுபடாமல் தமிழ் மக்களிடையே பகையென்னும் நச்சு விதையைத் தூவித் தமிழினத்திற்கே நாசக்கேடு விளைவித்து வருவதை இயல்பாகக் கொண்டுள்ள நீர் உம் இதழ்களில் என்னைப் பற்றி அவதூறுகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறீர்! தமிழகத்தில் உம்மைத் தட்டிக் கேட்க யாருமில்லை என்ற தலைக்கொழுப்பினால் போலும், தமிழினத்தலைவர்களையும் தமிழறிஞர்களையும், தமிழினத்தின் பல பிரிவினரையும் கடுமையாகத் தாக்கி எழுதி வந்துள்ளீர்। இதுவரை நீர் உம்முடைய இதழ்களில் தாக்கி எழுதியுள்ளவர்களின் பட்டியலைப் பார்க்கும் போது அறைபறையரான நீர் பிறரைத் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டுள்ளீர் என்பது தெரிகிறது.

நீர் வெளியிட்டுள்ள மார்ச்-ஏப்ரல் 84 தென்மொழி இதழில் (பக் 9) 'பேராசையாசிரியரின் காட்டிக் கொடுக்கும் கயமைக்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரிய பெருஞ்சித்திரனார்
புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி
ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன்.
தென்மொழி நா. இளமாறன்.

சுவடி: 20] ௨௦௧௫ மீனம். பிரல்—மே-84' [ஓலை. 7

# அருளியின் சொல்லாராய்ச்சி ஒன்றே தமிழை மீட்கும் அருந்திறன் கொண்டது!

('இவை தமிழல்ல' நூலின் மதிப்புரை)

(பொது முன்னுரை : இக் கட்டுரையை மிக விழிப்புடனும் நடுநிலையுடனும் எழுதுகிறேன். அன்பெனும் உணர்வுக்கோ, உறவெனும் பாசத்திற்கோ ஒருசிறிதும் நெகிழாத அறிவுணர்வுடன் இதனை எழுதுகிறேன். தமிழ் மீதும் தமிழினத்தின் மீதும் தமிழ்நாட்டின் மீதும் தளராத அக்கறையும் ஆர்வமும் கொண்ட உள்ளவுணர்வே இதை எழுதத் தூண்டுகிறது. இதில் வேறுபாடு காண்கின்ற உள்ளங்கள் உண்மையற்ற, நடுநிலை பிறழ்ந்த உள்ளங்களாகவே இருக்க முடியும் என்று அன்புடன் உங்களுக்குக்கூறிக் கொள்கின்றேன். இனி, இக் கட்டுரையை அணைவரும் தவறாது படித்து உள்ளுணர்வுடன் சிந்திக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.)



சிறப்பு முன்னுரை :

அறத்தாழ்ந்து கிடக்கும் நம் தமிழ் மொழியையும் இனத்தையும் மீட்கும் பணி

அவ்வளவு எளிதாயில்லை என்பதைக் கடந்த முப்பதாண்டுகளின் தொடர்ந்த, ஆழ்ந்த, நிலைபிறழாத, உண்மையான தொண்டுக்குப் பின்நாளுக்குநாள்மிகுதியாகவும் உறுதியாகவும்உணர்ந்துகொண்டு வருகிறேன். இவற்றை மீட்பதற்குத் தம்மை முற்றாக ஒப்புக் கொடுக்கின்ற, ஈகம் செய்கின்ற ஒருவராலோ, அன்றிச் சிலராலோ தாம் இயலும் என்பதை முன்னினும் மேலாக இப்பொழுது உணர்கின்றேன். காரணம், இக்கால், உண்மைத் தொண்டு எது, பொய்த்தொண்டு எது, போலித்தொண்டு எது-என்று உணர்வதும் உணரச்செய்வதும் மிகவும் கடினமான செயலாக உள்ளது. அவரவரும் தாம் தாம் சொல்வதையே உண்மையென்றும், செய்வதையே உண்மையான தமிழ் மீட்புப் பணி தமிழின முன்னேற்றப் பணியென்றும், தமிழ்நாட்டு விடுதலைப் பணி என்றும் எண்ணிக் கொள்கின்றனர். அப்படியே விளம்பரப் படுத்தியும், மக்கள் ஆதரவைத் திரட்டியும் வருகின்றனர்.

ஆனால், இப்பொழுதுள்ள தமிழ் மீட்சி என்பது அத்துணை எளிதன்று என்பதையும், தமிழ்மொழி மீட்கப் பெறுதவரை தமிழினம் முன்னேறுவது மிகக் கடினமென்பதையும், தமிழினம் முன்னேறாதவரை, தமிழ்நாட்டை விடுதலை பெறச் செய்வது இயலாததொன்றாகவே இருக்குமென்பதையும், இம் முறையான செயல் முயற்சிகளல்லாமல், ஒருவேளை தமிழ்நாட்டை மீட்டு, அதன் வழி இனமுன்னேற்றத்தைச் செய்துவிட எண்ணுவதும், அவ்வாறு செய்வதும், மீண்டும் இவ்வினம் ஓர் இழுப்புப் பறிப்பான நிலையிலேயே, தாழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இடந்தந்து கொண்டே தான் இருக்குமென்பதையும் பலரும் விளங்கிக் கொள்ளாமலேயே உள்ளனர்.

இன்னும், தமிழினத்தின் வீழ்ச்சி எத்துணை ஆழமானதோ, கால நீட்சியும், இயல்புத் திரிபும் கொண்டதோ, அத்துணை ஆழமானதும், காலநீட்சியும், இயல்புத்திரிபும் தமிழ்மொழியின் தாழ்ச்சி நிலையிலும் உள்ளன என்பதையும் பலரும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. சிலர், தமிழ்மொழிப் பற்றே தவறானது என்றும், அது திரிபுற்றுக் கலப்பு நிலை எய்தியது இயற்கையே என்றும், அதைத்திருத்திப் பழைய நிலைக்குத் தூய்மையும், சிறப்பும் எய்தச்செய்வது தேவையேயில்லை யென்றும், ஒரு மொழி கலப்புறஉறத்தான் மேம்பாடும் உலக வழக்குத் தகுதியும் பெறும் என்றும், (பாமர) பொதுமக்களுக்கு விளங்கும்படி பேசுவதே போதுமென்றும், மேலும் தமிழ்மொழியைத் தூய்மையுறச் செய்து அதற்கு அறிவியல் திறமும் வாழ்வியல் உரமும் ஊட்டி, நிலைபெறச் செய்வது இயலாதது என்றும், வேகமாக மாறிவரும் அறிவியல் உலகச் சுழற்சியில், இத்தகைய முயற்சி வேண்டுவதில்லை யென்றும், பலவாறு தத்தமக்குத் தெரிந்த வகையிலெல்லாம் கூறி வருகின்றனர். இது, சறுக்கி விழுந்தவனைக் குழிதோண்டிப் புதைக்கும் வகையான பேச்சாகவே இருக்க முடியுமேயல்லால், உண்மையான, ஊக்கமான, அறிவியல் ஆக்கமான பேச்சாக இருத்தல் முடியாது.

முதலில் ஓர் இனம் தன்னை அடையாளம் காட்டிக்கொள்ளவும், நிலை நிறுத்திக்கொள்ளவுமே அதன் தாய்மொழி வழியாகத்தான் முடியுமே தவிர, வேறு மொழிகளின் வழியாக ஓர் இனத்தைக் கட்டமைத்துவிட முடியாது என்பதை நாம் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். ஆங்கிலேயர், பிரஞ்சு மொழியின் வழியாகவோ, பிரஞ்சியர் ஆங்கில மொழியின் வழியாகவோ, சீனர் சப்பானிய மொழியின் வழியாகவோ, சப்பானியர் சீன மொழி அல்லது ஆங்கிலம் அல்லது உருசிய மொழிகளின் வழியாகவோ முன்னேறியுள்ளனர் என்று எவரும் சொல்ல முடியாது. இவ்வுலகில் உள்ள ஒவ்வோரினமும் அவ்வவ்வினத்தின் தாய்மொழி வழியாகவே முன்னேறியுள்ளதையும், முன்னேற முயற்சி செய்து கொண்டு வருவதையும், மக்கள் வரலாறும் நாட்டு வரலாறும் நன்குணர்ந்தவர்கள் தெளிவாக உணர்வர். இவ் வியற்கை நெறிக்கு விலக்காக ஓரிரண்டு இனங்கள் வேறு மொழிகளின் வழியாக முன்னேறியுள்ளன என்றிருந்தால், அந்த இனங்களின் தாய்மொழிகள் ஒரு வகையிலோ அன்றிச் சில வகைகளிலோ குறைபாடுடைய மொழிகளாகவே இருக்க வேண்டும். அவற்றின் மொழிகள் போதிய வளர்ச்சி பெறாதன வாகவோ, எழுத்துகள் அற்றனவாகவோ, முறையான இலக்கண அமைப்புகளையும், சொல் தொகைகளையும் கொள்ளாதன வாகவோ இருக்க வேண்டும். மற்றபடி, வாழும் ஒரு மொழிக்குரிய அத்தனைக் கூறுகளையும் கொண்டுள்ள எந்த மொழியும் தன்னினத்தை வேறு ஒரு மொழிக்குரிய இனமாகவோ அல்லது வேறோர் இனத்துக்கு அடிமை இனமாகவோ செய்துள்ளது என்று எவரும் கூறிவிட முடியாது.

எனவே, ஓர் இனம் தன்னை ஈடேற்றிக் கொள்ளவும், நிலை நிறுத்திக் கொள்ளவும், அவ்வின முன்னேற்ற முயற்சிகள் எவ்வளவு தேவையோ, அவ்வளவு தேவை, அதன் மொழி முன்னேற்ற முயற்சிகளும். மொழியில்லாமல் அதன் இனமில்லை; இனமில்லாமல் அது நிலைபெறும் ஒரு நாடும் இருக்க முடியாது. நாடோடி இனத்துக்குத்தான் மொழிக் கட்டமைப்பும் இருக்காது; நில வரையறையும் இருக்க முடியாது. இவ்வுலகில் தாய்மொழியை அழியாமல் காத்துக்கொண்ட இனங்கள் பல, தங்களுக்குரிய நிலங்களை ஒரு காலகட்டத்தில் இழந்துபோயிருந்தாலும், மீண்டும் அவற்றின் தாய்மொழிகளின் வழியாக உணர்வும், விழிப்பும், உரிமையெழுச்சியும் பெற்று, தம்தம் நாடுகளை மீட்டுக்கொண்ட வரலாறுகள் பலவாகும். ஆனால், மொழிகளை அழித்துக்கொண்ட இனங்கள் நாடுகளை உறுதிப்படுத்திக் கொண்டதில்லை; முன்னேறியதுமில்லை. எனவே, ஓர் இனம் தன்னை முன்னேற்றிக் கொள்ளவும், தனக்கென ஒரு நாட்டை (அது முன் இருந்து இழந்து போயிருந்தாலும் சரி, புதிதாக ஒன்றை அமைத்துக் கொள்வதானாலும் சரி.) உருவாக்கிக் கொள்ளவும் அதன் தாய் மொழி மிக மிக இன்றியமையாததாகும். தாய்மொழி தேயத் தேய்வும், திரியத்திரியவும் இனத்தேய்வும் இனத்திரிபும் நேரும்.

அக்கால் அவ்வினம் ஓரினவுணர்வை இழந்து விடுகிறது. பின்னர், அதைக் கட்டமைத்து, ஓரின உணர்வைத் தட்டியெழுப்புவது மிகவும்கடினமானதும் அரிதானதும் ஆகியசெயலாகப்போய்விடும்.

இந்த நிலைகளையே நம் தமிழ்மொழி வரலாற்றிலும் தமிழின வரலாற்றிலும் கண்டு வருகிறோம். நம் மொழியின் கட்டமைப்பு மிகச் சீர்குலைந்து போனமையால்தான், நம் மக்கள் இனவுணர்வு கொள்ள முடியாதவர்களாகவும்,தன்னினத்தின் மீதே பற்றற்றவர் களாவும், அதையே வெறுப்பவர்களாகவும், பிற இனத்திற்கும் மொழிக்கும் அடிமையுற்றவர்களாகவும் பலவேறு சாதி, சமயப் பிரிவுகளாகப் பிரிந்து, பிற பிறவினரிடம் முரண்பாடும், பகையும் கொண்டவர்களாகவும், இவை தொடர்பாக எத்துணை முயற்சி களைச் செய்தாலும் விழிப்படையாதவர்களாகவும், கவலையற்ற வர்களாகவும், நாளுக்கு நாள் அகப்பகைகளையும், புறப்பகைகளை யும் ஏற்படுத்திக் கொண்டு அல்லலும் அழிவும் உறுபவர் களாகவும் இருக்கிறார்கள் என்பதை நன்றாக ஆய்ந்து அறிந்து, உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவையெல்லாமாகிய அழிவு நிலைகளினின்றும் தமிழினம் தன் தாய்மொழியையும், தன்னையும் காத்துக் கொண்டுதான் முன்னர் படிப்படியாக இழந்து போன தன் நாட்டையும் மீட்டுக் கொள்ள வேண்டுமென்பது மூழ்கிப்போன கப்பலைத் தூக்கி வெளிக்கொணரும் முயற்சியைப் போன்றதே ஆகும். மேலும் இந்த மொழிநிலை, இன நிலை, நாட்டுநிலை ஆகிய மூன்று முயற்சிகளும் தனித்தனியாகச் செய்யவேண்டிய முயற்சிகள் அல்ல;ஒட்டுமொத்தமாக இணைத்தே செய்யப் பெற வேண்டிய முயற்சிகள் ஆகும். இவை மூன்றுக்கும் ஒரே உணர்வுதான் அடிப்படையாகும். அவ்வுணர்வு இம்மூன்றையும் அளாவிக் கொண்டு இயங்க வேண்டும். முயற்சியும் அவ்வாறே செய்யப் பெறுதல் வேண்டும். அல்லாக்கால் பயன் விளையாது. உடலாலும், அறிவாலும், உள்ளத்தாலும் ஒருவன் நோய் கொண்ட விடத்து எவ்வாறு ஒரே நேரத்தில் ஒன்றுக் கொன்று முரணில்லாமல் மருத்துவம் செய்ய வேண்டுமோ, அவ்வாறு நாட்டாலும், இனத்தாலும், மொழியாலும் நோய்ப்பட்டுக் கிடக்கும் இத்தமிழனுக்கு, மூன்று நிலைகளிலும் நோய்நீக்கும் மருத்து வத்தையே செய்ய வேண்டும். இங்கு உடலைப் போன்றது நாடு; அறிவைப்போன்றது இனம்; உள்ளத்தை-மனத்தைப் போன்றது மொழி, உடல் ஊறுபட்டதுபோல் நாடு ஊறுபட்டுக்கிடக்கின்றது அறிவு ஊறு பட்டுப் போனால் அஃதாவது மூளைத்திறன் கெட்டுப் போனால் ஒருவன் எப்படித் தன் உறவினர்களையும் பிறரையும் உணர மாட்டாமல், யாரோ போல் பேசுவானோ, அப்படித் தமிழன் தன் இனத்தார் மேல் பற்றற்றவனாகவும், பகை கொண்டவனாகவும் உள்ளான்; அறிவுத்திரிபுற்றுப் பித்தம் (பைத்தியம்) பிடித்தவன் எவ்வாறு யார் பின்னாலும் போக முற்படுவானோ, அல்லது தானே

தனித்துத் திரிவானே, அவ்வாறு தமிழன் அறிவுத் திரிபுற்றுத், தன் இனமல்லாத வேறோர் இனத்தானின் பின்னர் போவதும், அவனுக் கடிமையாவதும், அவ்வாறில்லா விடத்து, தன்னினம் சாராமல், தன் தன் சாதியானுடன் தனித்துத் தனித்து இயங்குவது மாக உள்ளான். இனி மூளைத்திறம் குன்றியதும், திரிந்ததும் மட்டுமன்றி, மனநோயும் கொண்டவன் எவ்வாறு, மொழிச் செப்பமும், பொருள்பாடும் இன்றித் தெரிந்ததும், தெரியாததுமாக வாய்க்கு வந்தவாறெல்லாம் பேசுவானே, அவ்வாறு, இவன் தாய்மொழியறிவு குன்றியும் அல்லது திரிந்தும், கலப்புற்றும் போன நிலையில், வாய்க்கு வந்த எல்லா மொழிகளையும் கற்றும் கற்காமலும் உளறத் தொடங்கி விட்டான்.

இந்தத் தன்மையில், இவனுக்கு உடல்நலத்துக்கு மட்டுமோ, அறிவு நலத்துக்கு மட்டுமோ, மன நலத்துக்கு மட்டுமோ மருத்துவம் செய்வது, எவ்வாறு இவன் முழுநலத்துக்கும் பயன்படாதோ, அவ்வாறு பயன்படாமல் போய் விடும். எனவேதாம் கடந்த காலங்களில் இம் மொழி, இனம், நாடு ஆகியவற்றுள், ஒன்றைத் தவிர்த்து ஒன்றுக்குமோ அல்லது இரண்டுக்குமோ, அறிஞர்கள், பொதுநலத் தலைவர்கள் எனப்படுபவர்கள் செய்த முயற்சிகள், அவ்வப்பொழுது சிறுசிறு நலன்களை மட்டுமே தந்து, இன்னும் இவன் முழுப்பயனும் பெறமுடியாமல் செய்து விட்டன. இனி, இப்பொழுதுங்கூட, ஒருசிலர் செய்வது போல், மொழியை விட்டு, இனத்தை மட்டுமோ, இனத்தையும் மொழியையும் விட்டு, நாட்டை மட்டுமோ முன்னேற்றி விடமுடியும் என்று கருதுகின்றனர். இஃது இயலவே இயலாத வெற்று முயற்சியாகும்

இனி, இன்னுஞ் சிலர் தமிழ் மொழியை முன்னேற்றும் முயற்சியாகக் கருதிக் கொண்டு, இப்பொழுதுள்ள மொழி நிலையிலேயே, வெற்று இலக்கியங்களையும், இலக்கிய ஆராய்ச் சிகளையும் செய்துகொண்டிருப்பதும், சிலர் புதுச்சொற்களைப் புனைவதாக எண்ணிக் கொண்டு, சொல்மூலமும், வேர் மூலமும் அறியாமல், புன்சொற்களைப் பொருள் தெரியாமல் ஆக்கிக் கொண்டிருப்பதும், சிலர் வேரும் மூலமும் விளங்கக் கண்டவர் போல், தம் சிற்றறிவுக்குப் பட்டவாறு, வேற்றுமொழிகளின் அடிப்படை அறிவும், அவற்றை ஒப்பவைத்தெண்ணிப்பார்க்கும் ஒப்பீட்டறிவும், முயற்சியும் இன்றி, வாய்க்கும் கைக்கும் வந்த வாறு, மொழியாராய்ச்சி என்னும் பெயரால் பழியாராய்ச்சி செய்து, தமிழுக்குப் பெரிதும் அழிவையே தேடிக்கொண்டிருப் பதுமான முயற்சிகளில் அளவிறந்து ஈடுபட்டு, விளம்பரமும், பொருளும் திரட்டிப் போலித்தமிழறிஞர்களாய், அரசினரும், பிறரும் மதிப்ப, உலா வந்துகொண்டுள்ளனர். இன்னுஞ்சிலரோ, தாங்கள் ஏதோ, மேடைகள் தோறும் செய்கின்ற வெற்றுரை வாரச் சொற்பொழிவுகளாலும், வீணை பட்டிமன்ற வழக்காடு

மன்ற முட்டி மோதல்களாலும், கட்டுரை காரணங்களாலும் எதுகை மோனைகளை எடுத்து வீசிச்சொல்லணிச் சுவை நலன்களை மிடைந்த பாட்டரங்கங்களாலுமே தமிழ்மொழி முன்னேறி விடும் எனப் பூசற் பொய்யுரைகளை அவிழ்த்து விடுகின்றனர்.

இன்னும் சில புதுமை விரும்பிகள், தமிழ் ஏதோ முன்னேறியிராத மூங்கை மொழியென்று கருதிக்கொண்டு, அதன் மேல் ஏற்கனவே ஏறியிருக்கும் அயன்மொழிச் சுமையும், அழிம்புகளும் போதாவென்று, மேன்மேலும் தாம் கற்றனவும் பெற்றனவுமான, தூசியும் தும்பும் தூறுமாகிய ஆங்கிலம், இந்தி முதலியவற்றின் ஆரவாரச் சொற்களையும்,எழுத்துகளையும் அப்படியப்படியே, தாம் எழுதும்கழிசடைக் கதை, கட்டுரைகளில் புதையப் பூசித்,தமிழைப் புனைவும் வனைவும் செய்து விட்டதாகப் பூரிப்புக் கொள்ளுவதும், வேறுசிலர், உலகின் வேறெம் மொழியிலும் விளங்கித் தோன்றியிராத தமிழ் யாப்பியல் பரப்பை,தம் வெள்ளறிவுப் புணைகொண்டு நீந்திக் கரைகடக்கும் திறனற்றவராய்ப், புதுப்பா என்னும் சொற்பிதுக்கங்களையும் உணர்வுத் தூறல்களையும் வெளிப் படுத்தித், தமிழுக்குப் புதுமை சேர்த்துவிட்டோம் என்று போலிப் பெருமை கொண்டு, வெறுமை பேசித்திரிவதையும் காண்கிறோம்.

ஐயகோ! இத்துணை ஆரவாரங்களும் நந்தமிழ்த் தாய் மொழிக்கு மேலும் மேலும் இழிவையும் இகழ்வையும், பழியையும், பாழ்மைகளையுமன்றோ சேர்த்துக் கொண்டிருக்கின்றன! இதனைத் துளியும் உணரமாட்டாதவர்களாய், இப் போலியரும், கூலியரும் செய்யும் மூளித்தனங்களிலிருந்தும் மூடத்தனங்களிலிருந்தும், தமிழ்ச் சிதைவுகளைத் தடுத்து நிறுத்துபவர், யார்? அரசன்றோ, இதனைச் செய்யவேண்டும்! அதுவன்றோ, இதன் ஆக்கத்திற்குதவ வேண்டும். ஆனால், அரசாள வருகின்ற நம்மவரோ எத்துணை அளியர்! எத்துணை எளியர்! சாதி யென்னும் சாய்க்கடையில் கால்வைத்துக் கொண்டு, சமயமென்னும் கள்ளருந்திக் கட்சிக் கொடி பிடித்துக் கலாம் விளைத்துக் கொண்டிருப்பதற்கே அவர் களுக்கு நேரமில்லையே! இந்நிலையில் அவர்கள் உண்மையை உணரப் போவது எங்கு? எப்பொழுது? இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும், இன்னும் எப்பொழுது தமிழ் மீள்வது? எப்பொழுது நிலம் ஆள்வது?

இப்படிப்பட்ட ஒரு சூழலில்தான், தமிழ்மொழியின் தனி முன்னேற்றத்திற் கென்றே, கடந்த இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னர் தென்மொழி எனும் மூல முதலான தூயதமிழ் இதழைத் தொடங்கியதும், அதன் வழி, தூயதமிழ் மொழியறிஞரும், தமிழ்ச் சொற்பிறப்பியல் துறையில் ஆழமாகவும் அகலமாகவும் கால் ஊன்றியவரும் ஆகிய மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்க்கு முழு ஆதரவு கொடுத்ததும், அதன்வழி அவர் அத்துறையில் பீடுற நின்று, தமிழ்மொழிக்குப் பேராக்கம் தரும் வகையிலும், அதனை முன்னேறுமலும், முழுஆளுமை பெறுமலும்

தடுத்துக் கொண்டிருக்கும் ஆரியத்தினின்றும், பிறமொழித் தாக்கங்களினின்றும் மீட்பதற்கும், தம் நுண்மாண் நுழைபுல வன்மையினால் பற்பல முதன்மொழி ஆய்வு நூல்களை வெளிப் படுத்தியதும், படிப்படியாக நிகழ்ந்தன; நிகழ்த்தப் பெற்றன. இனி, அவ்வரும் பெரும் முயற்சியும், பலவகையான அகப்புற முட்டுப்பாடுகளுக் கிடையில், இடைமுரிந்து, தடை செறிந்து நின்று போனது.

இனி, அப்பேரறிஞருக்குப் பின், அவர் துறையை மேலும் நெறிப்படுத்தி, வலுப்படுத்தும் நோக்கத்துடன், அரசு, பல வாறான, மேலோட்டமான முயற்சிகளைச் செய்தது; செய்து வருகிறது. ஆனால், ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சருக் கரையென, பாவாணரின் கூரிய, சீரிய, நேரிய மொழி ஆய்வுகளுக் குப்பின், சாய்ந்து போன பந்தலுக்குச் சாய்காலைத் தாங்கலுக்கு நிறுத்தியதுபோல், ஒப்புக்குச் சப்பாணியாக, ஓரிருவரை அத்துறைக்குக் காவலாய் நிறுத்தி, அத்துறையைப் பெயரளவில் அழியாமல் காத்து வருகிறது. இது தொடர்பாகப் பாவாணர் மறைவுக்குப் பின் நாம் கூறிய பலகருத்துகளையும், அரசும் அதற்குத் துணையானவர்களும் அறவே புறக்கணித்தனர். இனி, இஃது இவ் வளவில் நிற்க, மொழியாய்வுத் துறை என்பது பற்றியும் தமிழுக்கு உண்மையாகச் செய்யவேண்டிய, அவ்வாறு செய்தால் தான் அதனை ஆரியத்தினின்றும் மீட்க இயலும் என்று கருதக் கூடிய, வலிவான முயற்சிகள் பற்றியும் ஒரு சில கூறவேண்டி யுள்ளது. எனவே அந்நிலைகளையும் சிறிது விளக்குவோம்.

இற்றை நிலையில் நாம் பேசிக்கொண்டிருப்பதும், எழுதிக் கொண்டிருப்பதும் உண்மையான, முழுமையான தமிழ் அன்று. கொச்சையானதும், பெரிதும் சமசுக்கிருதம் என்னும் ஆரியச் சார்பான செயற்கைக் கலவை மொழியால் தாக்குமுற்றதும், ஏறத்தாழ இருபத்தாறு மொழிகளின் சொற்கள் வந்து கலந் துள்ளதுமான ஒரு கலவைத்தமிழ் மொழியிலேயே பேசியும் எழுதியும் வருகிறோம். இன்னும் விளக்கமாகச் சொல்வதானால், ஓரளவு கற்றவராகவும் கல்லாதவராகவும் உள்ள பொதுமக்கள் பேசி வருவதும், நம் தமிழ் நாட்டுச் செய்தித்தாள்கள், பொது வான கதைகள், கட்டுரைகள் முதலிய வகை வெளியீடுகளில் எழுதப்பெறுவதும், மாணவர்கள், வாணிகர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் தம் வாய்களில் வழங்கப்பெறுவதுமாக உள்ள தமிழ்ச் சொற்களில் ஏறத்தாழ நூற்றுக்கு எண்பது சொற்கள் தமிழே இல்லை. இனிக், கற்றவர்களாகக் கருதுப்படுகின்ற தமிழல்லாத வேற்றியல் ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், பிற தொழிலறிஞர்கள், அரசியல் பேச்சாளர்கள் முதலியோர் பேசி வரும் சொற்களில் ஏறத்தாழ நூற்றுக்கு ஐம்பது முதல் நாற்பது சொற்கள் வரை தமிழில்லை. இனி, மூன்றும் நிலையில் உள்ள தமிழ் ஆசிரியர்கள், இலக்கிய எழுத்தாளர்கள், பேசுவனவற்றுள் ளும் எழுதுவனவற்றுள்ளும் தமிழ்மொழிக் கென்றே உழைக்கும்

இதழ்கள், வெளியீடுகள், அவ்வழி வரும் நூல்கள் ஆகியவற்றுள்ளும் பயிலப்பெறும் சொற்களுள் நூற்றுக்கு முப்பத்தைந்து முதல் இருபத்தைந்து வரை தமிழ் இல்லை. இனி; நம்மால் மிக விழிப்பாகவும் தூயதமிழ் வளர்ச்சிக்காகவுமே நடத்தப் பெறுகின்ற தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு போன்ற இதழ்களிலும்கூட, எவ்வகையிலேனும், ஓரிரு சொற்கள் கவனக்குறைவாலும், அறியாமையாலும், பயிலவேண்டிய இன்றியமையாலும் தமிழாக இல்லாமல் போய் விடுகின்றன என்பதையும் மிக வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

இவ்விடத்தில் ஒரு புள்ளி விளக்கத்தைக் கொடுப்பது இந்த நிலைமையைத் தெளிவாக்கும் என்று கருதுகிறோம். தமிழ்மொழியில் நாம் அன்றாடம் பயின்றுவரும் இருபத்தாறு பிறமொழிச் சொற்களும், பன்னிரண்டு கலப்பு மொழிச் சொற்களும் எந்தெந்த அளவில் கலந்துள்ளன என்பதை விழுக்காட்டடிப்படையில் கீழ் வரும் பட்டியலில் காட்டியுள்ளோம். இப்பட்டியலை உருவாக்குவதற்கு மொழியறிஞர் திரு. அருளி அவர்களின் அண்மையில் வெளிவந்துள்ள ‘இவை தமிழல்ல’ என்னும் ‘அயற்சொல் அகராதி’ அடிப்படையானது. அப் பட்டியல் வருமாறு: (நாம் தமிழொடு கலந்து பேசுகிற ஒவ்வொரு நூறு கலப்புச் சொற்களிலும், ஒவ்வொரு மொழிச் சொற்களும் எத்தனை கலந்துள்ளன என்பதைப் பட்டியல் காட்டும்.)

| | | | |
|---|---|---|---|
| 1) சமசுக்கிருதம் | 72.40. | 14) பஞ்சாபி | 0.10. |
| 2) உருது | 10.84. | 15) மலையாளம் | 0.10. |
| 3) ஆங்கிலம் | 4.72. | 16) இலத்தீனம் | 0.05. |
| 4) அரபி | 2.88. | 17) இசுப்பானியம் | 0.05. |
| 5) பெர்சியன் | 2.24. | 18) ஈபுரு | 0.05. |
| 6) இந்தி | 1.84. | 19) கன்னடம் | 0.05. |
| 7) தெலுங்கு | 1.19. | 20) சிங்களம் | 0.05. |
| 8) மராத்தி | 1.04. | 21) சிரியக் | 0.05. |
| 9) போர்த்துக்கீசியம் | 0.70. | 22) துருக்கி | 0.05. |
| 10) இந்துத்தானி | 0.50. | 23) பாலி | 0.05. |
| 11) பிராகிருதம் | 0.50. | 24) பிரேசிலியன் | 0.05 |
| 12) பிரஞ்சு | 0.25. | 25) மலாய் | 0.05 |
| 13) டச்சு | 0.15. | 6) சப்பானியம் | 0.05. |

## இருமொழிக் கலவைச் (HYBRID) சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) சமசுக்கிருதம் + தமிழ் | 69.39. | 7) சமசுக் + உருது: | 2.04 |
| 2) தமிழ் + சமசுக். | 6.1[illegible] | 8) உருது + மராத்தி | 2.04 |
| 3) ஆங்கிலம் + தமிழ் | 4.08 | 9) உருது + அரபி: | 2.04 |
| 4) உருது + தமிழ் | 4:08 | 10) பெர்சியன் + தமிழ் | 2.04 |
| 5) இந்துத்தானி + தமிழ் | 2.04 | 11) பிராகிருதம் + சமசுக் | 2.04 |
| 6) இந்தி + தெலுங்கு | 2.04 | 12) மராத்தி + தமிழ்: | 2.04 |

இவ்வாறு, முக்காற்பங்குக்கு மேல் கலப்பாக உள்ள ஒரு மொழியைத்தான் நாம் பேசியும், எழுதியும் வருகிறோமே தவிர தூய தமிழை அன்று என்பதை நெஞ்சு துணுக்குற நாம் நினைந்து கொள்ள வேண்டும். இந்த நிலை இப்படியே போனால் என்னவது? மொழியறிவே இல்லாத சிலர் சொல்வார்கள், தமிழ் மொழியை யாராலும் அழிக்க முடியாது என்று. ஆம் வேறு எந்த மொழிக்குரியவர்களும் அதை அழித்துவிட முடியாதுதான், ஆனால், தமிழ் மொழியைத் தமிழர்களே இன்னும் ஒரு நூற்றாண்டிற்குள்ளாக அழித்துவிட முடியும். இதைப் பற்றி நாம் அஞ்ச வேண்டும்; வெட்கப்பட வேண்டும். வெகுண்டெழ வேண்டும். ஊர்தோறும் இடந்தோறும் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும். தமிழை சமசுக்கிருதத்துடனோ, ஆங்கிலத்துடனோ அல்லது வேறுபிற மொழிகளுடனோ கலந்து பேசுவதையும், எழுதுவதையும் உடனே தவிர்க்க வேண்டும். அனைவரும் தூயதமிழிலேயே பேசவேண்டும். தூயதமிழ்ப் பெயர்களையே வைத்துக் கொள்ளவேண்டும். தமிழ் நாட்டில் உள்ள எந்த இடத்திலும் எதற்காகவும் தூயதமிழ் மொழியையே பயிலவேண்டும். ஊர்ப்பெயர்கள், கோவில்கள், கடவுளர் பெயர்கள், தெருப்பெயர்கள், கல்லூரிகள், பள்ளிகள், விளம்பரப் பெயர்கள், அறிவிப்புகள் முதலிய பல நிலைகளிலும் தூய தமிழ் வழக்கே நிலவுதல் வேண்டும். பண்டப்பெயர்கள், அளவீட்டுப் பெயர்கள் முதலிய அனைத்தும் தமிழாதல் வேண்டும். இதற்கென ஒரு தனி முயற்சியும் தனி அமைச்சுத்துறையும் அமைந்தாகல் வேண்டும். தமிழ் வளர்ச்சிக்கெனத் தனித் துறை அமைந்தால் போதாது: தனி அமைச்சகமே அமைதல் வேண்டும். அவ்வாறு அமைக்கும் அரசே தமிழ் அரசாக முடியும். அதுவன்றித் திராவிட அரசு தமிழரசு ஆகாது. 'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்.' -என்று பாவேந்தர் சொன்னது அப்பொழுதுதான் நிறைவுறும்; மற்றபடி வெறும் தமிழ்ப்பற்று உள்ளதாகப் பேசிக்கொள்ளும் தமிழ-னெல்லாம் தமிழாய்ந்த தமிழனாகிவிட முடியாது.

இனி, வெறும் எழுத்தே தமிழாகாது; சொற்களே தமிழ்; மொழியே தமிழ்; அதுவும் வழங்கினால்தான் மொழி; அப்பொழுது தான் அஃது உயிர்வாழும். வழங்காவிட்டால், மொழிவாழாது; நாளடைவில் அது வீழும்; வெறும் எழுத்தைத் திருத்துவதால் தமிழ்ச் சீர்திருத்தம் செய்து விட்டதாகப் பொருளாகிவிட முடியாது. மொழிவழக்கைத் திருத்த வேண்டும். அப்பொழுதுதான் மொழி இருக்கும். வெறும் எழுத்து மட்டும் இருந்து, மொழி அழிந்து கொண்டு வருமானால், அந்த எழுத்துக்கும் ஒரு காலத்தில் தேவை இல்லாமற் போகும். தமிழ்மொழிச் சீர்திருத்தத்திற்கென முயலாமல், தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கடைப்பிடிக்கச் செய்வது, உடல் நோயைப் போக்காமல், உடல் அழகைப் பேணச் சொல்லும், ஒரு திசை திருப்பு முயற்சியே ஆகும் என்று உணர்தல் வேண்டும். ஆங்கிலச் சொற்களை இடையிடையே தமிழில் கலந்து தமிழ்

எழுத்துகளில் எழுதிய, தமிழுக்குப் பகையான கதையாசிரியர்களும், கட்டுரையாசிரியர்களும், வர வர, இப்பொழுது, ஆங்கில எழுத்துகளிலேயே சொற்களையும் சொற்றொடர்களையும், தமிழ்க் கதை, கட்டுரைகளுக்கிடையில் கலந்தெழுதி வருவது, நாம் மேலே கூறிய உண்மையை வலியுறுத்துவதாகும்.

ஒரு காலத்தில் ஆங்கில மொழி வல்லாண்மையால் நசுக்குண்டு கிடந்த பிரஞ்சும், அயிரிசும், (அயர்லாந்து மொழி) கனரியனும் (கனடா மொழி) இன்று, அவ்வாளுமையினின்று நீங்கித் தனி பிரஞ்சு ஆகவும், தனி அயிரிசாகவும் தனிக்கனரியனாகவும் ஆகி, வழக்குற்று வெற்றி பெற்றுள்ளதை நாம் எடுத்துக்காட்டாகக் கொள்ளுதல் வேண்டும். பிரஞ்சு நாட்டை ஒட்டியே இங்கிலாந்து இருந்தாலும், ஒரு பிரஞ்சிடன் ஓர் ஆங்கிலச்சொல்லையும் (YES அல்லது No என்பதையும் கூட) சொல்ல மறுப்பதை, அண்மையில் நாம் அங்கு சென்று வந்த பொழுது கண்டு அவர்களின் நிலைக்காகப் பெருமையும், நம் நிலைக்காக மிகவெட்கிய தலைக்குனிவும் கொண்டோம். பிரான்சில் ஓரிடத்தில்கூட ஓர் ஆங்கிலச் சொல்லை அவர்களின் பேச்சிலோ எழுத்திலோ காண முடியவில்லை. அவர்களென்ன உலக உருண்டையிலிருந்து தனியாகவா பிய்த்துக்கொண்டு போய் விட்டார்கள்? அவர்களின் மொழியுணர்வை எவரும் தவறென்றோ, வெறியன்றோ சொல்லிவிட்டு, அந்த நாட்டிற்குள் ஒருவன் போய் வந்துவிட முடியாதே! அந்த நாட்டில் என்ன, அறிவியல் முன்னேறாமலா போய் விட்டது? இன்னுஞ் சொன்னால், தம் தம் மொழியிலேயே கல்வி, தொழில், ஆளுமை, அரசு, பொருளிடல் ஆகிய அனைத்துமாக ஏற்படுத்திக் கொண்ட பிரான்சும், செருமனும், சப்பானுந்தாம் உலக அரங்கில் வாழ்வறிவியலில் மிக முன்னேறி உள்ளன. அறிவியல் முன்னேற்றம் கொண்டுள்ள வேறு சில நாடுகள் அறிவியலை அழிவுக்கும், பிற நாடுகளை அடக்குவதற்குமன்றோ பயன்படுத்துகின்றன.

எனவே, பிரஞ்சு, செருமன் (மேற்கு), அயிரிசு, கனரியன் மக்களின் மொழியுணர்வு நமக்கும் வரவேண்டும். அழிந்து போன ஈபுரு மொழியை வளர்ப்பதற்கு இசரேலியர்கள் (யூதர்கள்) பாடுபட்டதைப் போல, நாமும் பாடுபட்டு, முயற்சி செய்து, நம தமிழ்மொழியை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும். மொழி என்பது கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு கருவி மட்டுமே என்றும், பொது (பாமர) மக்களுக்கு விளங்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் எழுதுகிறோம், பேசுகிறோம் என்றும் கூறிக் கொண்டு, தமிழைக் குழி தோண்டிப் புதைக்கும் முயற்சியில் ஆரியத்துக்குத் துணைபோகும் அனைத்துத் தமிழர்களும் தமிழைக் காட்டிக் கொடுப்பவர்களே! மொழி என்பது வெறும் கருத்தை மட்டுமே பரிமாறும் கருவியன்று; அஃது, உணர்வைப் பரிமாறும்,

அறிவைப் பரிமாறும், ஒற்றுமையைப் பரிமாறும், உயிரியக்கத்தைப் பரிமாறும் கருவிபென்று உணர்ந்து கொள்ள வேண்டும். அஃது இனத்தை வளர்ப்பது; இனவுணர்வை நிலைப்படுத்துவது; தன் மானத்தை ஊக்குவிப்பது; தனக்கென ஒரு நாட்டைக் கட்டமைப்பது-என்றும் விளங்கிக் கொள்ள வேண்டும்

அரசியலில் ஆரியத்துக்குத் துணை போவது எத்துணைக் கீழ்மையோ, இனவியலில் ஆரியத்துக்கு அடிபணிவது எத்துணை இழிவானதோ, மதவியலில் ஆரியத்துக்கு அடிமைப்படுவது எத்துணை அறியாமையானதோ வாழ்வியலில் ஆரியத்தைச் சார்ந்திருப்பது, எத்துணை இகழ்ச்சியானதோ, அத்துணைக் கீழ்மையானதும், இழிவானதும், அறியாமையானதும், இகழ்ச்சி யானதும் ஆகும், மொழியியலிலும் ஆரியத்தைச் சார்ந்திருப்பது இது, சோற்றில் மலத்தை அல்லது சாணியை, அல்லது மண்ணைக் கலக்க இசைய மாட்டேன் என்று வெறுப்புடனும் வீறாப்புடனும் கூறிக் கொண்டு, குழம்பில் கலந்து தின்னுவதால் இழிவோ தவறோ இல்லையென்று அறிவின்றியும் மானமின்றியும் பேசுவதைப் போனறதாகும். தனக்கு மொழிபறி வில்லை என்பதையும், அதன் மேல் பற்றில்லையென்பதையும். அதுபற்றி அக்கறையில்லை பென்பதையும் மூடிமறைத்துக் கொள்ளுகிற ஒரு தன்மான மற்ற, ஒருவகையில் பகுத்தறிவுமற்ற செயலாகும் என்பதை அனைவரும உணர்ந்து கொள்ள வேண்டும்.

இனி, தமிழைப் பிறமொழிகள் எதுவும் கலவாமல், தூய்மை யாகப் பேசவும் எழுதவும் வேண்டும் என்னும் நோக்கத்தில், கடந்த காலங்களில் மறைமலையடிகளார்,' சோமசுந்தர பாரதியார், நீலாம்பிகையம்மையார், பா. வே. மாணிக்கனார், கா. சுப்பிரமணியனார், பாரதிதாசன், தேவநேயப்பாவாணர் முதலிய பேரறிஞர்கள் பலவாறு முயன்று, அதை ஒரு பேரியக்க மாகவே வளர்த்தனர். இவர்களுள் பாவாணர் தவிர மற்ற அனைவரின் முயற்சியும், வெறுங் கொள்கையளவில் மட்டுமே இயங்கியது. மொழிஞாயிறு பாவாணரே அந்த முயற்சிக்கு ஒரு செயல் வடிவம் அமைத்தார். தமிழ் மொழியில் பெரிதும் கலந்துள்ள ஆரிய மொழியாகிய சமசுக்கிருதத்தின் உண்மை வரலாற்றினையும், தமிழ்மொழியினது தொன்மை வரலாற் றினையும், அதன் திறப்பாடுகளையும் நன்கு ஆராய்ந்து வெளிக் கொணர்ந்து, தமிழ் திரவிட மொழிகளுக் கெல்லாம் தாயும், ஆரிய மொழிகளுக்கு எல்லாம் மூலமாயுமிருக்கும் தன்மையை, அனைவரும் நன்கு உணருமாறு செய்தார். தமிழ் உலகமொழிகளுக் கெல்லாம் மூத்ததும் முதன்மையானதும் என்பதைத் தம் ஐம்ப தாண்டுக்கால நுண்ணிய ஆராய்ச்சிகளின் மூலம் எடுத்துக் காட்டித், 'தமிழ், இலக்கியச்செழுமை வாய்ந்த உலக முதன் மொழி' (The Primary Classical Language of the World) என்பதை நிலைநாட்டினார். அவரின் இந்த முடிவை மெய்ப்பிக்க

மிக முகாமையான நூல்கள் பலவற்றையும் எழுதினர். அவர் கூற்றுக்கு மிக வலிவு சேர்க்கும் வகையிலும், தமிழ்மொழியை ஆரியப் பிடிப்பினின்று மீட்கும் முயல்விலும், அவர்தம் வாழ் நாளின் இறுதி முயற்சியாக, 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி (The Tamil Etymological Dictionary) எனும் தமிழ்மொழிக்கு இதுவரை இல்லாத ஓர் அரிய பெரிய அகர முதலியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

அவ் வகரமுதலியை ஒவ்வொன்றும் ஆயிரம் பக்கங்கள் கொண்ட இருபது மடலங்கள் (Volumes) ஆக வெளியிட வேண்டும் என்றும் அவர் திட்டமிட்டார். அத்திட்டத்தின்படி, ஒரு மடலம் மட்டும் எழுதிமுடிக்கப் பெற்ற பொழுது, அந்தோ, அவர் மறைந்தார். எழுபது அகவை தாண்டிய கழிமுதுமையில், வாழ்நாளின் இறுதிப் பகுதியில் அவர் இம் முயற்சியை மேற் கொண்டதாலும், அவரின் முயற்சிக்குப் போதிய ஆதரவை, அரசு முன்னமேயே தராமல் மிகவும் பிந்திய நிலையிலேயே தந்தமை யாலும், அதுவும் அவர் விரும்பிய பல ஏந்துக் குறைவான நிலைகளையும் நீக்கிச் சரி செய்யாமையாலும் அவரின் அம்முயற்சி ஓரளவுதானும் வெற்றிபெறுமல் போய் விட்டது. இது தமிழ் மொழிக்கு நேர்ந்த மாபெரும் பேரிழப்பாகும். இவ்விழப்பின் அளவை, இன்றுள்ள தமிழ்த்தலைவர்களோ, ஓரிரு பேராசிரியரும் தமிழறிஞரும் தவிர, வேறு தமிழ்ப் பேராசிரியர்கள் பலருமோ அறியமாட்டார்கள். இவ்விருபதாம் நூற்றாண்டில் தமிழுக்கு நேரவிருந்த ஒட்டுமொத்தமான, ஓர் ஆக்க முயற்சி அதனால் பெரிதும் தடைப்பட்டுப்போன அவ்வாய்ப்புக் குறைவால், தமிழ் மொழியின் முன்னேற்றம் பெரிதும் நிலைகுன்றிப் போய்விட்டது, ஆ, என்னே கொடுமை!

இவ்விடத்தில், 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி' என்பது பற்றி ஒரு விளக்கம் தருவது, அதனை நன்கு விளங்கிக் கொள்ள வாய்ப்பில்லாதவர்களுக்கு மிகவும் பயனுடைய ஒன்றாகும்.

அதற்கு முன்னர், நாம் இன்று பேசி வருகின்ற தமிழ்மொழி பற்றிய முந்தைய வரலாற்றை ஒரு சிறிது தெரிந்து கொள்ள வேண்டும். தமிழ்மொழி என்பது இன்று நேற்றுத் தோன்றிய ஒரு மொழியன்று, என்பதை ஒருவாறு முன்னரே பலரும் அறிவர் இனி, இதனினும் ஒருபடி மேலே சென்று அதனை அறிந்தவர்கள் கூட, 'அது மிகவும் பழைமை வாய்ந்தது; திராவிட மொழிக்குடும் பத்தில் மூத்தது; முதலானது; மூலமானது; இந்திய மொழிகளுக் குள்ளே மிகப்பழம்பெரும் இலக்கியங்கள் கொண்டது; நிறைவான இலக்கணம் கொண்டது — என்னும் அளவிலேயே பொதுவாக உணர்ந்திருப்பர்.

—தொடரும்

---

**அன்பர்கள் கவனிக்க....**

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்களைக் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்

— அச்சகத்தார்.




(சுருக்க மதிப்புரைக்கு நூலின் இரண்டுபடிகளும்,
விரிவான மதிப்புரைக்கு ஐந்து படிகளும்
அனுப்ப வேண்டும்.)

1. அன்னைமொழியும் ஆட்சித்துறையும்

ஆசிரியர் : கோ. முத்துப்பிள்ளை

வெளியீடு : முத்தமிழ் நிலையம், 24-ஆருவது குறுக்குச்சாலை மகாகவி பாரதி நகர், சென்னை-39.

பக்கம் : 128; விலை: உரு 5.

ஆசிரியர் எழுதிய 13 ஆட்சிமொழிக் கட்டுரைகள் அடங்கிய நூல் இது. ஆசிரியர் அவர்கள் தலைமைச் செயலகத்திலும், தமிழ் வளர்ச்சித் துறையிலும் நீண்ட காலம் சிறப்புறப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள். அந்தப் பட்டறிவில், ஆங்கிலச் சொற்களின் வழக்கீட்டுக்குத் தகுந்த தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடித்து வழங்குவதிலும், முன்னரே வழக்கிலிருந்து பின்னர் வேற்று மொழிச் சொற்களின் பயில்வால் மறக்கப்பெற்ற சொற்களைத் தேடி அவற்றை ஆட்சி வழக்குக்குக்கொண்டுவந்ததிலும், அவருக்கேற்பட்ட ஆய்வறிவுகள், நிகழ்ச்சிச் சூழ்நிலைகள் ஆகியவற்றை, அவருக்கே உரிய நகைச்சுவையுணர்வுடனும், ஆர்வத்துடனும் மிகச்சிறப்பாக எடுத்து விளக்குகிறார். தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட விழையும் தமிழன்பர்களும், இளைஞர்களும் இதனை நன்கு கற்றுத் தங்கள் முயற்சிக்கு ஒரு வழிகாட்டியாகக் கொள்ளலாம்.

2. பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம்

தொகுப்பாசிரியர்: மா. பா. குருசாமி எ.மு,

வெளியீடு: பாவேந்தர் மன்றம், 240 நாடார்தெரு, திருச்செந்தூர் 628215.

பக்கம் : 60, விலை: உரு 2.

பாவேந்தரைப்பற்றிய சுருக்க வரலாறும், அவருடைய படைப்புகள் பற்றிய சுருக்க விளக்கமும், அவரைப் பற்றி வெளிவந்த நூற்பட்டியலும், வெளியிடப்பெற்ற மலர்களின் பட்டியலும் ஓரிரண்டு நினைவுக் குறிப்புகளும் உள்ளடங்கியுள்ளன. அவரைப் பற்றி ஆய்பவர்களுக்கு ஒரு வழிகாட்டி நூல்.

3. சாங்கிய காரிகை

ஆசிரியர் : புலவர் நெல்லை க. சுப்பிரமணியன் எ.மு,

வெளியீடு : உமா நூலகம், 19 வேம்படித்தெரு, திருநெல்வேலி-6.

பக்கம் : 74, விலை: மக்கள் பதிப்பு உரு. 4.
நூலகப்பதிப்பு : உரு 6.

இஃது ஒரு மெய்ப்பொருள் நூல். மெய்ப்பொருள் உண்மைகளைக் கொள்கைகளாக வகுத்த நிலையில், ஆறு வகைகளாக அவை விளங்கிவருகின்றன. அவை நியாயம், யோகம், வைசேடிகம், பூருவமீமாம்சம், உத்தரமீமாம்சம், சாங்கியம் என்பன. சாங்கிய நூலை இயற்றியவர் மிகப் பழங்காலத்தவராகக் கருதப்படும் கபிலர் என்பர்.

சாங்கிய நூலின் மெய்ம்மங்களை கி.பி. 2-ஆம் நூற்றாண்டினரான ஈசுவர கிருட்டினர் சாங்கிய காரிகை என்னும் பெயரில் வடமொழியில் எழுபத்துமூன்று நூற்பாக்களாகச் செய்தார். அந்நூற்பாக்களை மொழிபெயர்த்து அதேபோல் நூற்பாக்களாக அகவல் யாப்பில் தமிழில் செய்யப்பெற்றதே இந்நூலாகும். விளங்கிக் கொள்ளவே மிகக்கடினமான சாங்கிய நூலை, நன்றாகக் கற்று, தமிழில் அதுவும் பாவடிவில் மொழிபெயர்ப்பது மிக மிகக் கடினமான செயல். நூலாசிரியரின் முயற்சி மிகவும் வியத்தற்கும் பாராட்டுதற்குமுரியது. மெய்ப்பொருள் பயிலும் உயர் கல்வி மாணவர்களுக்குப் பாடமாக வைக்கும் தகுதியுடையது இந்நூல்.

4. புதுவாழ்வு (பாவியம்)

ஆசிரியர் : இராவணன் (ஞா. தாவீது செபகுணம்)
வெளியீடு : கதிரவன் பதிப்பகம் 1, அ.நெல்லை நாயனுர்தெரு பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.
பக்கம் : 102 விலை: உரு : 3

ஒரு கதையைத் தழுவி எழுந்த பாட்டு நூல் இது. கலிநிலைத் துறையும், அறுசீர் எண்சீர் மண்டிலங்களும், அகவலும் கலந்து, மொத்தம் 405 பாடல்களைக் கொண்டது இப்பாவிய நூல். பாடல்கள் மரபு வழிநின்று பிழையற, இனிமையான ஆற்றொழுக்கு நடையில் இயல்கின்றன. உவமைகளும், கருத்துகளும், படிப்பதற்கு இன்பந்தருவனவாய் உள்ளன. பாடல்களூடு பரந்து செல்லும் கதையும் இக்கால நிலைகளுக்கு ஏற்றவகையில் இயைந்து செல்கிறது. செய்யுளின்பம் நாடும் பாவலர்கள் விரும்பிப்படிப்பதற்கு ஏற்றது இந்நூல்.

5. கற்பனைச் சுவடுகள் : (பாடல்கள்)

ஆசிரியர்: ஆரூர்தமிழ்நாடன் (சு.ரா. மோகன்)
வெளியீடு: திராவிட ஒளி பதிப்பகம்
பக்கம் : 80; விலை: உரு 5.

இஃது ஒரு பாடல் தொகுப்பு நூல். குமுகாயக் கோலங்கள் என்னும் பிரிவில் 11 பாடல்களும், நெஞ்சுறை நாயகர்கள் என்னும் பிரிவில் 9 பாடல்களும், குறுங்கதைக் கோட்டம் என்னும் பிரிவில் 3 குறுங்கதைப் பாடல்களும், இறுதியாக ஒரு பாட்டுரைப்புலம்பல் எனும் பிரிவில் ஒரு நெடும்பாட்டும், இரண்டு வாழ்த்துப் பகுதிப் பாடல்களுமாகத் தொகுப்பெற்றுள்ளது இந்நூல். பாவலர்க்கே உரியதான மிடுக்கும், சொற்செட்டும்,

உவமை நயங்களும் பாடல்களில் மிளிர்கின்றன. பல்வகைப் பாடல்களில் நூல் இயங்குகிறது. பாட்டு ஆர்வலர்கள் கேட்டு வாங்கிப் படிக்கும் நூல் இது.

6. ஆய்வுகள் தீர்வுகள் (பாடல்கள்)

தொகுப்பாசிரியர்கள்: 'தமிழ்ச்சுடர்' மணிமுத்து, ஒடவை ந. தமிழ்வேந்தன்

வெளியீடு: தமிழ்ச்சுடர் பதிப்பகம். 27-பி, இலக்குமிபுரம், பழனி-624602.

பக்கம் : 90: விலை: உரு 5.

பாவலர்கள் ஒடவை ந. தமிழ்வேந்தன், க அ. ஒளியவன், பழனி மகிழ்நன், வலகுரார், வெள்ளிமீன், உதயாசத்தியன், இராசு, கன்னல், மணிமாறன், தமிழ்ச்சுடர் மணிமுத்து ஆகிய பதின்மர் பாடிய எண்பத்திரண்டு பாடல்களின் தொகுப்பு நூல் இது. பாடல்களில் பல தூய தமிழில் விளங்குகின்றன. பாட்டியல் இலக்கண மரபுகெடாமல், வெண்பா, மண்டிலம், இசைப்பா முதலிய யாப்புகளில் பாடல்கள் இயங்குகின்றன உவமையும், சொல்லாட்சியும், புதுமையும், வீறும் பயின்று பாடல்கள் படிப்பார்க்கு இன்பம் தருகின்றன. பாடல் விரும்புவார் அனைவரும் படித்து மகிழ வேண்டியது இந்நூல்.

7. துறைதோறும் திரு.வி.க.

பதிப்பாசிரியர்: பேரா. பா: வளன் அரசு க.மு.

வெளியீடு: கதிரவன் பதிப்பகம், 1-அ. நெல்லைநாயனார் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

பக்கம் : 102: விலை: உரு 6.

திருநெல்வேலித் தனித்தமிழ் இலக்கியக் கழகம், திரு வி.க. நூற்றாண்டை முன்னிட்டு, திரு.வி.க. அவர்களைப் பற்றிய தொடர் சொற்பொழிவுகளை நடத்திய முறையில், ஆங்கு நிகழ்ந்த ஆய் வரங்கத்தின் எழுத்துரைகளைத் தொகுத்து இந்நூலாக வெளி யிட்டுள்ளது. ஆய்வரங்கத்தின் தலைவர் பேரா. திரு. கோ. சங்கரராசலு (கல்லூரிக் கல்வித்துணை இயக்குநர், நெல்லை) அவர்களின் தலைமையுரையும், பத்து ஆய்வுரைகளும் நூலுள் உள்ளன. ஆய்வுரை நிகழ்த்திய அறிஞர்கள், திரு.வி.க. அவர்களை இலக்கிய அறிஞராகவும், பெருமைதரு மாந்தராகவும், சிந்தனை யாளராகவும், தொழிலாளர் தலைவராகவும், சமயச்சான்றோராக வும், உரையாசிரியராகவும், உரைநடையாசிரியராகவும், சொற் பொழிவாளராகவும், பாவலராகவும், இதழாசிரியராகவும் நிலை நாட்டித் தம்தம் கருத்துரைகளை விரித்துரை செய்திருக்கின்றனர். மேனிலைப்பள்ளிகளில் கட்டுரைப் பகுதிக்கும் வரலாற்றுப் பகுதிக்கும் பாடமாக வைக்கத் தகுதி பெற்ற நூல் இது.

8. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் முதுமைத்தமிழ்
(பாடல் இலக்கியம்)
ஆசிரியர் : வளர்தமிழ்ப் பாவலர், மருத்துவர் பறையரசன் (த. தேவராசன்).
வெளியீடு: வளர்தமிழ்ப் பதிப்பகம், நீடாமங்கலம், தஞ்சை மா. வ. 614404.
பக்கம் : 155; விலை: 7.

பிள்ளைத் தமிழ் என்பது மரபியல் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. தமிழில் பல பிள்ளைத்தமிழ் நூல்கள் உள்ளன. தாம் போற்றி எடுத்துக்கொண்ட ஒரு பாட்டுடைத்தலைவரைக் குழந்தை வடிவாய் உருவகம் செய்து கொண்டு, பிள்ளைத்தமிழ் இலக்கியத் துக்குரிய பத்துப் பருவங்களிலும், அவரின் சீரும் சிறப்பும் பயின்று வரக் கற்பனை செய்து பாடுவதாகும் பிள்ளைத்தமிழ். இவ்விலக்கிய மரபின் மறுதலையாக முதுமைத்தமிழ் என்னும் ஒரு புதிய இலக்கிய வகையைத் தமிழுக்குத் தந்துள்ளார் இந்நூலின் ஆசிரியர்.

இவரின் இப் புத்திலக்கிய ஆக்கத்திற்குப் பாட்டுடைத் தலைவராகப் போற்றிக் கொள்ளப்பெற்றவர், புதுமையும் பொது மையும் கலந்து, எளியார்க்கும் ஏழையர்க்கும் பாட்டிசைத்த பாவலர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆவார். அவரைப் பற்றிக் காப்புப்பருவம், பிள்ளைக்கனியமுது பருவம், வருகைப் பருவம், நரைமுடிப் பருவம்,கண்ணுடிப் பருவம்,பேரர்மகிழ்பருவம், வழுக்கைத்தலைப் பருவம், கைக்கொட்டுப் பருவம் ஆகிய பத்துப் பருவங்களைக் கற்பனை செய்துகொண்டு, அழகிய இனிய பன்னிரு சீர்ச் செய்யுளடிகளில், சிறந்த இந்நூலை யாத்துள்ளார் இவ் வளர்தமிழ்ப் பாவலர்.

பாடல்கள் யாவும் அழகிய சந்தத்தில் பொருள்பொதிந்து மிளிர்கின்றன. பருவத்திற்குப் பத்துப் பாடல்களும் வாழ்த்துப் பாடலொன்றும் சேர்ந்த 101 பாடல்களும் படிக்கவும் இசையுடன் பாடவும், இன்பம் தருவனவாயும், உணர்வு துள்ளுவனவாயும் இயங்குகின்றன. பாடலாசிரியரின் பாட்டுத்திறத்துக்கு ஒவ்வொரு பாடலடியும் சான்று பகர்கின்றன. புதிய முயற்சி; நல்ல விளைவு; சிறந்த கற்பனை, பாவலரின் பாட்டாற்றலைப் போற்றுகிறோம்.

9. புதிய பூபாளம் (பாடல்கள்)
ஆசிரியர்: பாவலர் உலகன்.
வெளியீடு: சோலோ பதிப்பகம் சென்னை-600 072
பக்கம் : 96; விலை: உரு 5.

30 பாடல்களின் தொகுப்புநூல் இது. சிறுசிறு பாட்டடிகள்; உணர்வுவரிகள்; ஊற்றுப்போல் உணர்வு சுரக்கின்றன. புதுப் பாடல்களும் மரபுப் பாடல்களும் கலந்து கற்பனைக் குமிழிக ளுடன் பாடல்கள் சிலுசிலுக்கின்றன. இக்காலத்துப் பெரிதும் விரும்பும் எளிய, இனிய நடை! புதிய, புதுமைக் கருத்துகள்! பொதுமை உணர்வூட்டும் நூல்! 0

# அகம் 366 கூறும் அறிவுரை!

— தி. நா. அறிவுஒளி, க.மு., கல்.இ.,

அழகான ஊர்.

ஊருக்கு ஒரு புறம் கடல். அலையாடுங் கடல். நீரை வாய்க்கால் வழியாக உப்புவயல் பாத்திகளில் பாய்ச்சிக் கடல் விளை அமிழ்தமான 'உப்பு' விளைவிக்கும் தொழிலாளிகள் பாடுபடுகின்றனர்.

வெள்ளுப்பு சருப்பூரக் காடுபோல வெயிலில் பளிச்சிடுகிறது.

உப்புவயல்களுக்கு அப்பால் நீர்நிலை. தண்ணீரைத் தொடும் அளவுக்குத் தாழ்ந்து வளர்ந்திருக்கும் கிளைகள் நிறைந்த அடர்ந்த மருதமரங்கள் அழகு விருந்தளிக்கின்றன.

கழனிகளில் பயிர், கதிர்முற்றிச் சாய்ந்துகிடக்கின்றது.

உழவர் கதிர்களை அறுத்து அகலமான களத்தில் போரைப் பிரித்து உதறி கடாமாடுகளை விட்டுப்புணை ஓட்டுகின்றனர்.

களைப்படைந்த மாடுகளைக் கட்டு அவிழ்த்து மேயவிடுகின்றனர். கள் குடிக்கின்றனர். அந்தக் களிப்புடன் வேலை தொடங்குகின்றனர்.

காற்று விரைந்து வீசுகிறது. களத்தில் குப்பையுடன் கலந்திருந்த நெல்லை முறத்தில் வாரிக் காற்றுள்ள போதே தூற்றுகின்றனர்.

காற்று நெல்மணிகளை விட்டு விட்டுத் தூசு துரும்பு போன்ற குப்பைகளை ஏந்திப் பறந்து சென்று வெள்ளைநிற உப்புவயலில் சேர்க்கின்றது.

தூய வெண்ணிற உப்பெல்லாம் மாசடைகின்றன. உப்பளம் குப்பைக் கூளமாகிவிட்டது; சிறிய சிறிய பாத்திகளில் பூத்திருந்த உப்பு, குப்பையாகிறது.

பெரிய கடற்பரப்பில் குளிர்ச்சிமிக்க துறையில் வாழும் நுளையர்கள் (நெய்தல் நில மீனவர்) இனிமை பொருந்திய வெண்மை உப்பு கெட்டுப் போனதைக் காண்கின்றனர். சினம் எழுகிறது!

கழனி உழவரோடு பகைத்து சீறுகின்றனர் பரதவர்.

பேச்சு முற்றுகிறது.

கைகலக்கிறது.

உழவர்கள் பாய, நுளையர்கள் கழனிச் சேற்றை வாரி உழவர் மீது வீசுகின்றனர்.

மருத நில மக்களின் ஆண்டிலும் அறிவிலும் பெரியவர்களாக விளங்குபவர்கள் நடப்பைக் கூர்ந்து பார்க்கின்றனர்.

உடனே எழுந்து வருகின்றனர்.

நகரத்த மயிருடன் விளங்கும் மூதாளர்கள், ஒருவரோடு ஒருவர் கட்டிப் பிடித்துப் போரிடும் கழனி உழவரையும் உப்பு உழவரையும் போரிடாதபடி விலக்குகின்றனர்; பூசலை அடக்குகின்றனர்.

"உப்புவயல் மீது குப்பை விழுந்தது தப்புதான். உழவர்கள் வேண்டுமென்றே அந்தத் தப்பைச் செய்யவில்லை. நெடுநேரம் கடாவிட்டுப் புணையோட்டிக் களைத்தனர் உழவர். மாட்டுக்கும் ஓய்வளித்துத் தாமும் ஓய்வுகொண்டனர். அப்போது கள்ளை உண்டனர்! குடித்த கள் மூளையைக் கெடுத்து மயக்கத்தைக் கொடுத்தது. அப்போது வகையாக விரைந்து காற்று அடித்தது. காற்றுள்ள போதே தூற்றக் கருதிக் கள் மயக்கத்தோடு களத்தில் நெல்லைத் தூற்றினர். அந்தக் காற்று உப்புவயல் பக்கம் பறந்தது. குப்பை உப்பின்மீது விழுந்தது. காயலில் சிறு பாத்திகளில் தூசு துரும்புகள் நிறைந்து உப்பின் சிறப்பைக் குறைத்தன. ஆகவே தவறு வேண்டுமென்றே நேரவில்லை; அதனால் பகையும் போரும் வேண்டியதில்லை. நெல்லும் உப்பும் ஒத்திருந்தால்தான் உணவு சுவைக்கும். உழவரும் களமரும் ஒற்றுமையாக வாழ்ந்தால்தான் ஊர் செழிக்கும்." என்று அமைதி கூறினர்.

பின் மூதாளர் முற்றிய தேனில் இருந்து ஆக்கிய 'தேறல்' என்னும் கள்ளின் தெளிவை நெய்தல் நில நுளையர்க்கு விருந்தோம்பல் முறையில் குடித்துக் குடிக்கச் செய்தனர்.

பரதவரும் உழவரும் மன அமைதியடைந்து பகைமாறினர்; நண்பராயினர்.

இந்நிகழ்ச்சி 'நீழல்' என்ற ஊரில் நிகழ்ந்தது, இந்த நீழல் என்ற ஊரையாண்ட மன்னன்'எவ்வி' என்னும் பெயர் உடையவன். பொன்னால் செய்த 'பூண்' என்னும் விலையுயர்ந்த அணிகலனை அணிந்திருந்தான் எவ்வி.

எவ்வியின் ஆட்சியினால் மாட்சி மிக்கதாக விளங்கிய நீழல் என்னும் ஊர் பேரழகும் பெருஞ்செல்வமும் பெருமதிப்பும் உடையதாகப் பொலிந்தது.

இவ்வூரின் அழகைப் போல் அழகுள்ள ஒருபெண் இருந்தாள். அவள் தோளழகே அழகு! நல்ல நெற்றி உடையவள்.

ஆனால், அவள் ஒரு பரத்தை.

இப்பரத்தையோடு தலைவன் மணங்கமழும் குளிர்ச்சியுள்ள சோலையில் தங்கி நேற்று இன்புற்றான். அதனால் தலைவிக்குத் தீங்கு செய்தான்.

அதைத் தலைவி உணர்ந்தாள். தெய்வம் போன்றவளான தலைவி கண்ணீர் சிந்தும் கண்களை உடையவளானாள்.

"எவ்வளவு சிறந்த பெண்ணாகிய தலைவிக்கு எத்துணைத்தீங்கு செய்துவிட்டாய்! நீ!" என்று தோழி தலைவனைக் கண்டித்தாள்.

இந்தச் செய்தியுடைய பாட்டு அகநானூற்றில் உள்ளது. இப்பாட்டின் ஆசிரியர் குடவாயிற் கீரத்தனார்.

"தாழ்சினை மருதம் தகைபெறக் கவினிய
நீர்சூழ் வியன்களம் பொலியப் போர்பழித்துக்
கள்ளார் களமர் பகடுதலை மாற்றிக்
கடுங்காற்று எறியப் போகிய துரும்புடன்
காயல் சிறுதடி கண்கெடப் பாய்தலின்
இருநீர்ப் பரப்பிற் பனித்துறைப் பரதவர்
தீம்பொழி வெள்ளுப்புச் சிதைதலிற் சினைஇக்
கழனி உழவரொடு மாறுஎதிர்ந்து மயங்கி
இருஞ்சேற்று அள்ளல் எறிசெருக் கண்டு
நரைமூ தாளர் கைபிணி விடுத்து
நனைமுதிர் தேறல் நுளையர்க்கு ஈயும்
பொலம்பூண் எவ்வி நீழல் அன்ன
நலம்பெறு பணைத்தோள் நன்னுதல் அரிவையொடு
மணங்கமழ் தண்பொழில் அல்கி நெருநை
நீதற் பிழைத்தமை அறிந்து
கலுழ்ந்த கண்ணள்எம் அணங்கு அன்னளே"

(அகம். 366-மருதம் - பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் வாயில் வேண்டிய விடத்துத் தோழி சொல்லியது.-குடவாயிற் கீரத்தனார் பாடியது.)

ஈடில்லாத இலக்கியப்பாடல் இது. இப்பாடல் அகப்பொருள் நுட்பம் வாய்ந்தது. ஆனால்..

தமிழினத்தை உய்விக்கும் நெறிகாட்டும் ஒப்பில்லாத புறப் பொருட்பாடல் இஃது என்பேன்.

தமிழினத்திற்கு அறிவூட்டும் அறநெறிப் பாடல் இஃது என்பேன்.

பதினாறு அடியுள்ள இவ்வாசிரியப் பாட்டின் பன்னிரண்டு அடிகள் புறச்செய்தியை விளக்குகின்றன.

எவ்வி என்பவன் தலைநகரமான நீழல் என்னும் ஊரின் வண்ணனையே பன்னிரண்டடிகள்!

பன்னிரண்டடிகளும் தமிழர் பன்னிப் பன்னிப் படிக்கத் தக்கவை; தம் நெஞ்சிற் பதிக்கத்தக்கவை; தம் வாழ்வில் கடைப் பிடிக்கத்தக்கவை!

கழகக்காலத்தில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்கூடத் தமிழர் தமக்குள் சின்னஞ் சிறு நிகழ்ச்சிகளுக்காக அடித்துப் பகைத்துக் கொண்டனர் என்பதைப் பாட்டு படம் பிடித்துக் காட்டுகிறது,

இன்றும், தமிழர்—

சாதிபடிப்படையால், சமய அடிப்படையால், கட்சியடிப் படையால், சிறு சிறு கொள்கைகள் கருத்துகள் அடிப்படையால் தமக்குத்தாமே அடித்துக் கொள்கின்றனர்; அழித்துக் கொள்கின் றனர்; அழிந்து மடிகின்றனர்!

'தமிழினம்' என்னும் உணர்வை வளர்த்துச் சிறப்பதற்குக் கற்பிக்கும் 'மூதாளர்' தமிழ் நாட்டில் பலர் வேண்டும்.

நீழலில் மூதாளர் சிலர் உழவருக்கும் நுளையருக்கும் ஏற்பட்ட மோதலில் நடுநிலையாளராக நின்று, பூசலைத்தடுத்து, விலக்கி 'இரு சார்பினரையும் சந்து செய்வித்து 'நனை' முதிர் 'தேறல்! அளித்து இனஒற்றுமையை' வளர்த்தனா; காத்தனர்!

இன்றுகூடத் தமிழர்க்கு 'நனை முதிர்தேறல் (கள்ளுக்கடை யன்று; அதுதான் தமிழினத்தை அழித்துக் கொண்டேயிருக் கிறதே!) போலும் 'இனஒற்றுமை; 'தமிழினஉறவு' வலுப்படுத்தும் மாமருந்தளிக்கும் மூதாளர் வேண்டும்.

சிற்றூர் வாழ்வு சீராக அமைய மூதாளர் அன்று பாடுபட் டனர். அதுபோல செந்தமிழகத்தின் வாழ்வு சீருற மூதாளர் இன்று பாடுபட வேண்டும்.

எல்லாம் பெற்றிருக்குந்தமிழர் இனஉணர்வும் இனஒற்றுமையும் இனஎழுச்சியும் பெறவேண்டும். இல்லெனில் எல்லாவற்றையும் இழந்து விடுவா. இஃது உறுதி!! உறுதி!! உறுதி!!!

நமக்குள் கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். அது பகை மாறு பாடுகளாகப், போரிடும் கருவிகளாக, நமக்குள் நாமே மோதி அழியும்-அழிக்கும் நிலைகளாக ஆகக்கூடாது.

இந்த அறிவுரையைத்தான் குடவாயிற் கீரத்தனார் தமிழினத்திற்கு அகம் 366 ஆம் பாடல் வழி அருளியுள்ளார். வீட்டுவாழ்விலும் சரி, நாட்டுவாழ்விலுஞ்சரி, தமிழின நலம் பேணும் முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

குறிப்பாகக் கற்ற தமிழர் தமிழுணர்வும் தமிழின உணர்வும் உடையவராக ஆதல் நனி இன்றியமையாததாகும்.

சாதி, சமயப் பூசல்களில் அவற்றை மறை முகமாகத் தூண்டி விடும் 'கபவர்'கள் நேரில் கலந்து கொள்ளுவதில்லை.

கொலையுணர்வையும் தற்கொலையுணர்வையும் தமிழர்க் குள்ளேயே தமிழினப் பகைவர் தூண்டிவிட, கொலையும் தற் கொலையும் முட்டி மோதிப் போரிட்டிழிய, அகப்பகைவர் பல் லாயிரம் ஆண்டுகளாக ஆற்றும் தீங்கு இன்னே நிறுத்தப் பெறல் வேண்டும். (தொடர்ச்சி 25-ஆம் பக்கம்)

# பொருநைக் கரையில் புதையுண்ட நாகரிகம்,

— சித்திரம் —

வடிவேல் இராவணன்.

வேறுகாட்சி

— தமிழ்நிலத்தின் தென்கோடியில் அரும்பிய தென்மொழிப் பண்பாடு வடக்கே பரவி சிந்தாற்றங்கரையில் மலர்ந்து, மணம் பரப்பி, மேலை உலகுக்கும் நாகரிகத்தை ஊட்டிய வரலாற்றுப் பெட்டகம் பொருநையாற்றங் கரையில் புதையுண்டு கிடக்கிறது.

— பெட்டகத்தினைத் திறந்து பென்னம் பெரிய நாகரிக எச்சங்களை இன்றைய உலகுக்கு வழங்கிய பெருமான் அலெக்சாண்டர் ரீ என்னும் ஆங்கிலராவர்.

— இந்தியாவில் முதன் முதல் இங்குதான் அகழ்வாய்வு செய்யப் பெற்றது.

— ஆனால் வரலாறு இங்கிருந்து தொடங்கப்பெறவில்லையே!

— பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோட்டினையும் கொடுங்கடல் கொண்டபின்னர் குமரிப் பாண்டியரின் எச்சமாய் நின்று வரலாற்றுக் கெட்டா நெடுந் தொலைவுக் காலத்தே புதிய கற்காலப் பண்பாட்டில் மலர்ந்த வேளாண்மையோடு, வியன் மொழி பயிற்றி, இரும்புக்கால நாகரிகத்தை இந்நிலத்தே மலர்வித்த ஆதித்த நல்லூர், பொருநையாற்றங்கரையில் புதையுண்டதை மேலையுலகம் உணரத் தலைப்பட்டது.

— விளைவு—உலகப் பெரு நாகரிகங்களான சுமேரியா, நைலாற்றங்கரை, எகிபது, சிந்துவெளி நாகரிகம் இவையாவும் ஒரு மூலத் தாயக நாகரிகத்தின் செய்களாகவே விளங்கியதை யாவரும் உணர்ந்து தெளியும் காலம் நெருங்கியது.

— இந்து மாவாரியில் ஈராயிரம் கல் தொலை நீண்டு கிடந்த 'இலெமூரியா' என்று அழைக்கப் பெறும் குமரிக்கண்டமே மாந்தனின் தோற்றப் பிறப்பிடம் என்பது உறுதிப் படுத்தப் பெறுவதாயிற்று.

— அங்குத் தோன்றிய மாந்தப் பேரினமே உலகெங்கும் பல்கிப்பரவி, ஆங்காங்கே நாகரிகங்களைத் தோற்றுவித்தது. கதிரவனின் ஒளி காரிருளை விலக்குவதுபோல் பொய்ம்மையகன்று மெய்ம்மை வெளிப்படுவது போலாயிற்று.

— ஈராயிரங் கல்லுக்குத் தெற்கேயும் நீண்டிருந்த குமரிநாட்டு நாகரிகத்திற்கும் மூவாயிரம் கல்லுக்கு வடக்கே விலகியிருந்த

சிந்து வெளி நாகரிகத்திற்கும் ஓர் இணைப்புப் பாலமாக நின்று இலங்குவதுதான் ஆதித்த நல்லூர் நாகரிகம்.

-- எனவேதான் 1922-ஆம் ஆண்டு முதன் முதலாக மொகஞ் சாதோரோவை அகழ்வாய்வு செய்த வங்கப் பேரறிஞர் பானர்சி என்பார் —

— "சிந்து வெளியிலும் பலுசித்தானத்திலும் நிகழ்த்தப் பெற்ற அகழ்வாய்வுகளின் கண்டு பிடிப்புகள் இந்தியாவின் தென் கோடியிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தின் ஆதித்த நல்லூரி லிருந்து அறுந்து போகாத ஒரு தொடர்போல் திரவிடரின் பண் பாட்டுத் தொடர்புள்ளது" என்கிறார்.

— பொன்னாலான அணிமணிகளும், சிறப்பாகப் பொற் பட்டங்களும்,

— வெண்கலத்தாலான ஏனங்களும் கலங்களும்,

— இரும்பாலான வீட்டுப் பொருள்களும் போர்க்கருவிகளும் பண்டைத் தமிழ நாகரிகத்தின் தொன்மை முன்மைக்குச் சான்றாக விளங்குகின்றன.

— சுண்ணம் தீட்டப்பட்ட கருப்பு-சிவப்புப் பாண்டங்களும்,

— செவ்வண்ணமான - கனமான முதுமக்கள் தாழிகளும், அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியல் செம்மையைப் புலப்படுத்துகின்றன.

— வளைகளும் மோதிரங்களும், காப்புகளும் கடகங்களும் கடுக்-கண்களும், தமிழர்தம் அணி மணிச்சிறப்பையும்,

— எலும்புகளில் ஒட்டிக் காணப்பட்ட பஞ்சாபையின் பதிவு, நெசவுத் தொழிலில் தேர்ச்சி பெற்றிருந்ததையும்,

— பாண்டங்களில் கிடந்த அரிசி, தினை,சாமை முதலிய தவசங்கள் வேளாண்மை வளத்தையும் விளக்கி நிற்கின்றன.

— கல்லானான தட்டுமுட்டுப் பொருள்கள், செந்நிறப்பாசி மணிகள், வெண்கலப் பாசிகள், கழுத்துமாலைகள் ஆகியவற்றை.

— ஆதித்தநல்லூரில் அகழ்வாய்வு செய்து அரிய பொருள்களை வெளிக் கொணர்ந்தவரே அறிஞர் அலெக்சாண்டர் ரீ என்பார்.

— அங்கு அகழ்ந்தெடுக்கப்பெற்ற தாழிகளுள் எலும்புகளுக்கும் மண்ணிற்கும் ஊடே ஒளிகுன்றாது மின்னெனத் திகழ்ந்தன பொற்பட்டங்கள்.

— ஏறத்தாழ இருபத்துமூன்றுக்கும் மேலாகப் பொற்பட்டங்கள் கிடைத்துள்ளன.

— அவை முட்டை வடிவத்திலும், நீள வடிவிலும், முக்கோண வடிவிலும் இருந்தன.

— சிந்துவெளி மக்களும் பொற்பட்டங்கள் கட்டி வாழ்ந்தனர்.

— கிரேத்தாத்தீவு, பினிசியா நாடுகளிலும் குடியேறிய திராவிடர் களிடமும் இவ் வழக்கம் இருந்ததென்பதை 'இந்திய நாகரிகத்தில்

திரவிடப் பண்பு' என்னும் நூலில் கில்பர்ட் சிலேற்றர் கூறுகிறார்.

— ஆதித்த நல்லூரிலிருந்து சிந்து வெளிவரை திரவிட நாகரிகம் பரவியிருந்ததை இப் பொற்பட்டங்களே சிறப்பாகக் காட்டுகின்றன.

— ஐதராபாத்துக் கற்குவியல்களில் காணப்படும் மட்பாண்ட உள்வட்டக் கீற்றுகளும், பொற்பட்டங்களும் திரவிடர்க்கும், நோசாசுவைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்த கிரேத்தாத் தீவின் கடலோடி நாகரிக மக்களுக்கும் தொடர்புண்டு என்பதை மெய்ப்பிக்கின்றன.

— உலகில் முதன்முதலில் பொன்னைக் கண்டநாடு தமிழகமே. எனவேதான்,

பொன்விளைந்த களத்தூர், பொன்னேரி,
பொன்னுணி, பொன்னூர், பொன்னமராவதி,
பொன்வயல்,பொன்முகநல்லூர்—இவ்வாறு ஊர்ப் பெயர்கள் அமைந்தன. இங்கெல்லாம் பொன் கிடைத்ததாக நம்பப்படுகிறது.

— பொன்னை மாழை என்றே அழைத்தனர். கருப்பாயிருந்த மாழையைக் 'கரும்பொன்' அஃதாவது 'இரும்பொன்' என்றும், வெண்மையாயிருந்ததை 'வெண்பொன்' என்றும், சிவப்பாயிருந் ததைச் 'செம்பொன்' என்றும் அழைத்தனர். இரும்பொன் 'இரும்பு' ஆயிற்று; செம்பொன் 'செம்பு' ஆற்று.

— பொன் அணிகளும், பொற்படிமைகளும்,
பொற் சிலைகளும், பொற்றேர்களும்,
பொன் விளக்குகளும், பொற்கலங்களும்
ஏராளாமாயிருந்தன.

— வேந்தரும் வள்ளல்களும் புலவர்க்கும், பாணர்க்கும், விறலியர்க்கும் பொற்றாமரைப் பூவும், பொற்கிழியும், பொற்காசும், பொன்னணிகளும் அளித்து மகிழ்ந்தனர்.

— விழா நாட்களில் யானைகள் பொன்முகப்படாம் அணிந்து, கொம்புகளில் 'கிம்புரி' என்னும் பொற்பூண்களும், பொன் அம்பாரிகளும் தாங்கியிருந்தன.

— தமிழ்நாட்டுத் தெருக்களில் சாதரூபம், கிளிச்சிறை போன்ற மாற்றுக் குறைந்த இளம் பொன் வகைகளும்,

— ஆடகம், சாம்பூநதம் என்னும் மாற்றுயர்ந்த செம் பொன் வகைகளும் விற்கப்பட்டன.

— மெசபத்தோமியாவையடுத்த கல் தேயாவில் உள்ள ஊர் (Ur) என்னும் நகரில் பொன்னணிகள் இடைத்துள்ளன. தமிழகத்தி லிருந்தே பொன் சென்றிருக்க வேண்டும்.

— சுபாத்து அரசியின் கல்லறையில் காணப்பட்ட தலையணிகள், பொன் நாடா, பொன் கணையாழி, பொற்றகட்டால் போர்த் தப்பட்ட யாழ் போன்றவற்றை உல்லி (Woolly) என்பார் 1927-ஆம் ஆண்டு கண்டறிந்தார்.

— மெசபத்தோமியாவிலும் பொன் காணப்பட்டது. தமிழகத்திலிருந்தே இப் பொன் சென்றிருக்க வேண்டும்.

— இரும்பைக் கண்டவரே நாகரிகத்திற்கு வித்திட்டோராகக் கருதப்படுகின்றனர்.

— ஆதித்த நல்லூர் அகழ்வாய்வில் இரும்புக் கருவிகளும் பொருள்களும் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

— அவை படைக்கலன்களாகவும் தொழிற் கருவிகளாகவும் காணப்படுகின்றன.

— முகாமையானவையாக
அம்புமுனைவேல், அரிய ஆயுதம், ஈட்டி, உடைவாள், கத்தி, குத்துவாள், கூரிய வாள், கேடயம், கைக் கோடரி, கொக்கித்தடி கூம்புவாய் ஈட்டி, சிறிய ஈட்டி, கூரியவாய் ஈட்டி, செங்கோணவா ஈட்டி,சிறிய நுனியுடைய ஈட்டி, மூவிலைவேல் எனப்படும் திரிசூலம், வளைகத்திகள், வங்கிகள், வாள்கள், வேலாயுதம், சூலாயுதம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

— இவற்றுள் ஈட்டி, எறிவேல், குத்துவாள், உடைவாள், வங்கி முதலியவற்றை ஆரியர் அறிந்திருக்கவில்லை.

— 'இவற்றைத் தமிழர் தவிர வேறு எவரும் தங்களுடையவை என்று சொந்தங் கொண்டாடிவிட முடியாது' என்று ஏ.பி. சந்திர சேகரன் என்பார் தமது 'பண்டைக்கால இந்தியப் போர்க் கருவிகள்' என்னும் நூலில் கூறுகிறார்.

— நம்நாட்டின் படைக் கலங்களை ஆதித்த நல்லூரில் அகழ்ந்து கண்டெடுக்கப் பெற்றவை காட்டுமெனப் ''பண்டைக் கால இந்தியாவும் போர்க்கலையும்'' என்ற நூலில் பி.சி.சக்கரவர்த்தி கூறுகிறார்.

— தமிழகத்தில் போன்று உலகில் வேறெங்கணும் இவ்வளவு படைக்கருவிகளைக் காண முடியாது. வாள் வகைகளில்தாம் எத்தனை?

உவணி, ஏதி, கடுத்தலை, துவட்டி,
நவிர் நாட்டம், வஞ்சம்,
ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கட்கம், காவாளம், நாந்தகம், வசி,
மட்டாயுதம், தூவத்தி முதலான வாள்களும்
— அரிகதிர், கத்தி, குனிக்குயம் முதலான அரிவாள்களும், முகண்டி, சிறுவாள் எனப்படும் கூன் வாள்களும்,

— குயம், புள்ளம் எனப்படும் கொடுவாள்களும்,

— வேதிகை, கரபத்திரம் எனப்படும் ஈர்வாள்களும்,

— சுரிகை, பத்திரம், வளைவாள், அங்குசம் கண்டம், குத்துவாள், கொடுவாள், வெட்டறுவாள், வீச்சறுவாள், பாளையறுவாள், பன்னரிவாள், கொடுக்கரிவாள் ஆகிய உடைவாள்களும்

— குறும்பிடி, கைவாள், கத்தி(சூரி) ஆகியகுறுவாள்களும்,

— சரணம், கணச்சி என்னும் கோணம், இட்டி, ஈட்டி, கழுக்கடை ஆகிய வளைவாள்களும்,

— அயில், கைவேல், தோமரம், கப்பணம், அரணம், எஃகம், எரியாயுதம், பீலித்தண்டு, பிண்டியாலம், எஃகு, குந்தம்(கைவேல்) நூங்கர், உடம்பிடி, விட்டேறு ஆகிய வேல் வகைகளும்,

— கழு - காளம், நல்வசி, கழுமுள், மூவிலைவேல், முத்தலைவேல், கழுக்கண், காழ், இரும்பு முள் ஆகிய மூவிலை வேல்களும்,

— முழு(பரசு, பாலம்), கணிச்சி (கண்டகோடரி), நவியம்(கோடரி, குடாரம்), குந்தாலி, குளிர் தண்ணம் எனப்படும் கோடரி வகைகளும்,

— கார்முகம், கோதண்டம், துரோணம், சராசனம் ஆகிய வில்வகைகளும்.

— அம்பு, கணை, கதிரம்,கதிர், கோல், தொடை, தோணி, பகழி, பள்ளம், புடை, வண்டு, வாளி தெருப்புக்கணை, நச்சுக்கணை, மயக்குகணை, பூக்கணை ஆகிய அம்பு வகைகளும்.

— தடி - தண்டம், சீர், வயிரம், மழை, எறுழ் தாண்டாயுதம், கதை, உலக்கை, கோல், குறுந்தடி ஆகிய தண்ட வகைகளும்,

— கிடுகு (தோலாலானது), பலகை (தட்டி)வேதிகை (மாழை), குதிரைக் கேடயம் ஆகிய கேடய வகைகளும்

— பாசக்கயிறு - கச்சை, நாண்வடம், பழுதை, தாமம், வலைக்கயிறு முதலான பாச வகைகளும்,

— வச்சிரம் (முதுகெலும்பு),
வயிரப்படை (குலிசம், சம்பம், அசனி, சதகோடி) முதலான வச்சிரப் படைகளும்

— திகிரி - சக்கரம், நேமி, ஆழி, எஃகம், வளைபாதி, ஒளிவட்டம், சுதரிசனம் முதலான சக்கர வகைகளும் பண்டைத் தமிழகத்தில் புழக்கத்தில் இருந்தன.

— கிண்ணம், குடம், குவளை, கெண்டி, சல்லடைக் குடிகலம், சாடி, சிறு குவளைகள், பூக்கிண்ணம், பரல்கள், பாதச்சிலம்பு, காற்சதங்கை, வளையல்.

— நாய், சேவல், மறி, மான், ஆடு, புலிபோலும் விலங்குகளின் படங்களுடைய பூந்தட்டுகள், பூக்கிண்ணங்கள் ஆகிய வெண்கலப் பொருள்களும் அங்குக் கிடைத்துள்ளன.

— இப் பூக்கிண்ணங்களுக்கு இணையாக உலகில் வேறெங்கும் காணப்படவில்லை. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய வனப்புடைய கலங்களை உருவாக்கிப் பயன்படுத்தியவர் தமிழர்.

— சிலைகள் வடிப்பதிலும், படிமங்கள் 'அமைப்பதிலும் தமிழகச் சிற்பியர்க்கு இணையாக உலகில் எவருமிலர். தமிழகத்துப் பாவை விளக்கிற்கு ஈடாக இந்தியாவில் எங்கும் அழகு வாய்ந்த விளக்குகளைக் காண முடியாதென்று,

# 'பாவியம்' (செய்யுள் தழுவிய கதை)

— சி. நா. செந்தமிழ்ச்செல்வன், க.மு

'பாவியம்' பாக்களின் உச்சி; அஃது எவ்வகைப் பாவாலும் ஆக்கப்படலாம்; பலப் பாவினங்கள் விரவியும் வரலாம்; 'சிலம்பில்' உள்ளதுபோல் 'உரைப்பாட்டு மடையும்' அதில் இடம் பெறலாம்: அதன் உட்கருவைச் சுற்றி வாழ்வியல் பின்னப்பட்டிருந்தாலும் அதன் நோக்கம் உலகுவாழ் மாந்தர்கட்கு உயர்ந்த இலக்கைக் கற்பித்து வாழ்வை மேம்படுத்தவேண்டும்.

சிறுகதைப் பாக்கள் குறும்பாவியமாகும்; நெடுங்கதைப் பாக்கள் நெடும்பாவியமாகும். பாவியங்கள் மிக எளிதாகவோ மிகவும் கடினமாகவோ அமைந்துவிடக்கூடாது; இடைப்பட்டதாக அனைவரும் விரும்பும் வண்ணம் அமைவதோடு அக்கால வரலாற்றையும், குமுகாயத்தையும், இயற்கை அமைப்பையும்,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

'தென்னிந்திய விளக்குகள்'' என்ற நூலில் ஓ.சி. கங்கூலி கூறுகிறார்.

— ஆதித்த நல்லூரில் அறுநூற்றுக்கும் மேற்பட்ட மட்பாண்டங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

— அவை அகல், அண்டாச்சட்டி, உருளி, எண்ணெய்க்கிண்ணம், கலயம், கிண்ணம்,

— குண்டாப் போணி, குண்டா, குவளை, குதிர், கும்பாச்சட்டி, குழம்புச்சட்டி, கொட்டுக்கடவை,

— சந்தனப் பேழை, சட்டி, சாடி, சிதை, சுரைக்காய்ப் போணி, செம்பு, சோற்றுப்பானை,

— தயிர்ப்பானை, தவலை, தாழி, தாலம், தொட்டி, தோண்டி, தோசைக்கல்,

— பள்ளை, பணியாரச்சட்டி, பாலி, பானை, பானைமூடி, பொங்கற்படிப்பானை, பொரிக்கண் சட்டி, போணி, போணிச்சட்டி, முக்காலிக் குதில், முக்குளிச்சட்டி, மூக்குக்கிண்ணம்,

— வட்டில், வாணலி, வெண்ணெய்க்கிண்ணம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

— இக்கலங்கள் சிந்துவெளி மக்களின் கலன்களைவிடத் தொன்மையானவை; திண்மையும் சிறப்பும் வாய்ந்தவை.

— நன்கு வேகவைக்கப் பெற்றவை; செங்காவி பூசப்பட்டுக் கருப்பு-சிவப்பு வண்ணமுள்ளவையாயுள்ளன.

— ஆதித்த நல்லூரில் காணப்பட்ட மண்டையோடுகள் திரவிடரின் மண்டையோடுகளே என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

— ஆதித்த நல்லூர்த் தலையோடுகளும், பிற பொருள்கள் யாவும் திரவிடரின் மூதாதையர்க்கே உரியவை என்கிறார் தர்சுட்டன்.

— இத்தலையோடுகள், எகிப்தினதும் நண்ணிலக் கடல் நாட்டினதும் மக்களின் தலையோடுகளை ஒத்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

(தொடரும்)

அறிவியல் வளர்ச்சியையும், மொழிச்செழிப்பையும், மாந்தவியல் தன்மையையும், 'நாகரிக—பண்பாட்டு' முன்னேற்றத்தையும் தன்னுள் அடக்கியதாக இருக்க வேண்டும்.

எண்சுவைகளுள் யாதானும் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ நடுவாகக் கொண்டு தனிப்பாடல்கள் எழுதப்படலாம்; 'பாவியம்' அவ்வாறு அன்று; பல்சுவை மிக்கதாகவே எழுதப்பட வேண்டும்.

'பாவியம்' எழுதச்சொல்லி எழுதப்படுவதன்று; இயல்பாகவே பாவலன் அகத்தே மலர்ந்து மணம் வீசுவது; அம் மணத்தை உலகோர் நுகரத்தருவது; நுண்ணறிவுச் செறிவையும் தன்னகத்தே கொண்டது; மெய்யறிவுக் கூறையும், மெய்யன்பு—மெய்ப்பண்பு நிலைமையையும், நிலைநிறுத்தத் தோன்றுவது; பொய்மையையும், புன்மையையும், போலிமையையும் புறந்தள்ளிப் போக்குவது; தீமைகளைத் தாக்குவது; வீழ்த்துவது; மாட்சிமையை வளர்ப்பது; மண்ணுலகை உய்விப்பது.

'பாவியம்' அறநூலாகையில் சுருக்கமும், 'அன்பறிவு-பண்பு' நூலாகையில் விரிவும் பெறும்; 'முதல்-இடை-முடிவு' என்னும் முப்பெரும் படிநிலை வளர்ச்சி மிக்கது. பாவிய மாந்தர்கள் பண்பு மேம்பாடு மிக்கவராயினும் ஓரிரு குறைகள் (Flaws) இயல்பாகவே இருப்பதால் துன்பிற்காளாகின்றனர். தீயோர் ஒறுக்கப்படுதலும், மன்னிக்கப்படுதலும் வாழ்வியலில் காண்பதைப் போலவே பாவியங்களும் காட்டுகின்றன.

இசைத்தன்மை மிக்கப் பாக்கள் பாவியத்தில் இடம்பெற வேண்டும்; ஆங்காங்கு உரைப்பாட்டும் காலத்திற்கும், இடத்திற்கும், கருத்திற்கும், உணர்விற்கும், ஊக்கத்திற்கும், அறிவிற்கும் ஒழுக்கத்திற்கும், பிற ஏந்திற்கும் ஏற்ப இடம் பெறலாம்; அஃது இயல்பாக அமைவதோடு சிறப்பாகத் திகழ்வதே சிறப்பாகும்.

'இன்ப-துன்ப' இயல்புகளை இயம்புவது பாவியப் பேராசானின் உள்ளக்கிடக்கை; வினைப்பயனை விளம்புவதும் இன்றியமையாக் கடன். பண்டைப் பாவியங்களைப் பிற்போக்கின் பிறவிகள் என்றுரைப்பது தவறு; அவை அக்காலங்களைக் காட்டும் பளிங்குகளாகும்.

'பாவியம்' இலக்கியத்தின் இலக்கு; அஃது இயல்பாக எய்தக் கூடியதே; இயலாததன்று. நடைமுறை நச்சுப்போக்குகள் எதிர் மறையாகக் கதைப்பது கட்டாயம் புறந்தள்ளத் தக்கதே.

'பாவியம்' மாந்தவியலை நடுவாகக் கொண்டு எழுதப்படுவதாயினும் சிறப்புக் கருதிச் சிற்சில இடங்களில் கற்பனை தழுவிச் செல்வது தவிர்க்க இயலாதது. ஒழுக்கங்களை அறிவுறுத்தும்போது ஒத்ததையே கூறுவதோடும் — உண்மையை உரைப்பதோடும் — கொஞ்சம் அதிகமாக மிகைப்படுத்தாமல் இருக்க இயலுவதில்லை; மாந்த நலங்கருதி அதைச் செய்ய வேண்டியுள்ளது.

'இலக்கியம்' வெறும் எழுத்தன்று; உணர்வு, உயிர்ப்பு, ஊக்கம், இலக்கு, பண்பு, செயற்பாடு, பயன் ஆகியவற்றைத் தன்னுள் கொண்டது. பொதுவானதும்-சிறப்பானதும்-இயல்பானதும்-இவ்வுலகில் 'பாவியம்'! பிற இலக்கிய வடிவங்களைக் காட்டிலும் இதற்கு மதிப்பு மிகுதி; தொன்மையும், வன்மையும், மென்மையும் இனிமையும் தூய்மையும், வாய்மையும், வள்ளன்மையும் வாய்க்கப்பெற்றது.

கசப்பும், இனிப்பும், துவர்ப்பும், உவர்ப்பும், புளிப்பும் இன்ன பிறவும் கலந்த வாழ்வில் பாவலனுக்கும் அவையாவும் பொதுவே. பாவிலவை இடம்பெறுதிருக்குமா? காதலும், வீரமும் காணக் கிடக்கின்றன; பாவியங்களும் அவற்றையே பேசுகின்றன. 'உண்டு-இல்லை', 'உவகை-அவலம்' ஆகிய உட்குரல் (Innervoice) கேளா திருக்குமா? மெய்ம்மக் கருத்துகளை அவன் தூவல் இடையிடையே பொழியாது வாளாயிருக்குமா? சமயச் சாயலைச்சொல்லாதேகுமா?

அச்சம், வியப்பு, வீரம், வெகுளி அதிலே இருக்கும்; சமனிலை சாரும்; பிறவும் பாவில் தவழுவதுண்மை: சொல்லப்பட்ட பெருமிதம் நான்கும் (கல்வி, செல்வம், தறுகண், கொடை)சூழ்ந்து சுற்றும்; அவை அனைத்தும் மெய்ப்பாடாகும், வாழ்வியல் நாடகம் இஃதே!

ஒழுக்க உயர்வை, உணர்வை, ஊக்கந்தன்னை உணர்த்தும் 'பாவியம்' உவகையின் விளைநிலம்; இழுக்கைச் சிதைத்து இவ்வுலகை நல் இலக்கை நோக்கி இழுக்கும் ஆற்றல்; இன்பப் பெருக்கு, இயக்கவீச்சு, இசையின் இசை; புகழின் புகழ்; புலமை முகடு; மொழியின் மொழி; முதன்மைச் செய்யுள்; மூவா இளமை முகிழ்த்த ஞாயிறு. தண்மை தவழும் தேய்விலாத் தரைவாழ் திங்கள், கருத்து, விண்மீன்கூட்டம், கால ஓட்டம், முத்துக் குவியல், முத்தமிழ்க் கழனி; கண்ணோட்டக் காட்சி, கண்டுண்டு உவந்து உய்வு காண்போம் கனிந்து! கயமை வெல்வோம் துணிந்து!

---


# 'தமிழ் நிலம்'

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் அடங்கிய, கிழமை இதழ்!

| | | |
|---|---|---|
| 1. | தனியிதழ் | விலை உரு. 0.65 |
| 2. | ஆண்டுக் கட்டணம் | உரு. 36.00 |
| 3. | அரையாண்டுக் கட்டணம் | உரு. 18.00 |

ஓரிதழுக்கு உரு. 4.00 மேனி முன்பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு : தமிழ்நிலம், 5, அருணாசலத்தெரு. சென்னை-5.

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொய்யாய்ப், போக்கிலித் தன்மையால் கிளர்த்திவிடப்பட்ட சாதியுணர்வைச் - சமய உணர்வைக் - கட்சியுணர்வைப் - பயனில் பற்றுணர்வைத்-தன்னல வெறியுணர்வை மெய்யென நம்பி ஏற்றுப் போரிடவே கிளம்பும் தமிழ் அண்ணனும் தமிழ்த் தம்பியும் அடித்துக் கொண்டு மண்டை உடைத்துக் கொண்டு அழும் போது, சிந்துஞ் செங்குருதி தமிழினத்தின் குருதியாகவே இருக்கிறதே! இஃதென்ன கொடுமை!

தமிழர் எக் கொள்கை-எச்சார்பு உடையவராயினும் ஆகுக! ஆனால் தமிழின உணர்வுக்கு ஊறு நேராதவகையில் நடக்கக் கற்றுக் கொள்வாராக!

தமிழினத் தமிழனே அழித்துவந்த வரலாறுதான் தமிழக வரலாறு.

இந்த நூற்றாண்டில் இந்த இழிவை நாம் ஒழித்துக்கட்டா விடின், தமிழினம் தலை சிறப்பது கனவேயாகும்.

கள் மயக்கம் உழவர் வாழ்வில் போர் உண்டாக்கியது. அது போல கள்ளைவிட அறிவை மயக்கும் மடமைகள், தன்னல வெறிகள், உணர்வின்மைகள் ஆகிய கள்ளைக் குடித்துப் பல்லாயிரம் ஆண்டுகளாக மயக்கத்தில் கிடக்கும் தமிழர் வாழ்வில் பல போர்கள் உண்டாகின்றன.

இன ஒற்றுமை உடையவர்கள் வலிமை வாய்ந்தவராய் வெற்றியே பெறுபவராய் விளங்குகின்றனர். வரலாறு இவ்வுண்மையைத் தெளிவாக உணர்த்துகிறது. அதனால் புதிய தமிழகத்தைப் படைக்க வேண்டிய தமிழர் 'இனஒற்றுமையுணர்வை' உயிரை விட, வேறு எந்த இனிய பொருளையும்விட போற்றுதல் வேண்டும் இல்லெனில் காலம் தமிழரைப் பின்னுக்குத் தள்ளிவிடும். தமிழினம் புதைபொருள் ஆராய்ச்சிக்குரிய இனமாகிவிடும். 0


# "தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

| | உள் நாடு | கொழும்பு | வெளி நாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | 15 உருபா | 35 உருபா | 35 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 8 ,, | 18 ,, | 18 ,, |
| தனியிதழ் : | 1.25 ,, | 3 ,, | 3 ,, |

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# தாழாதினி எம்தலை !

— பாவலர் இளஞ்சித்திரன்

தாழா தினிஎம் தலை!ஒரு காலும் தமிழ்க்கிழிவு
சூழா திதுவரை சூழ்ந்தது மில்லை! சொறியுடற்றே
வாழா துயிர்!தமிழ் மண்ணில் விடுதலை வாய்க்குமட்டில்
வீழா தெனச்சூள் எடுத்தனம்! எச்சில் விழைந்திலவே

ஓயா தினிஎம் உடல்வயின் ஆற்றல் ஒருபொழுதும்
சாயா தெதிர்வரும் போலிப் பரிசுச் ?சலுகைகளில்!
தேயா இளமைத் தமிழ்க்கே விடுதலை சேர்க்குமட்டில்
மாயா தெமதுயிர் என்றே எடுத்தனம் வஞ்சினமே!

நாடா தெமதுயிர், உள்ளம் தமிழ்க்கே நலஞ்செய்யாக்
கேடா யினவர் உறவையும் அன்பையும் கீழ்மதிக்கும்!
வாடா வளமைத் தமிழ்க்கே விடுதலை வாங்குமட்டும்
மூடா தெமது விழிகள் எனச்சூள் மொழிந்தனமே!

பாடா தெமது தமிழ்க்கெதிர் வாயே! பழியினர்பால்
கூடா தவரின் பழக்கம் வெறுக்கும்! கூசும்மிக!
கோடாத் தமிழ்க்கொடிக் காட்சியை வாங்கிக்
கொடுக்குமட்டில்
ஓடா துயிர்எம் உடல்விட் டெனச்சூள் உரைத்தனமே!

கேளா தெமதிரு காதும் தமிழ்க்கே கெடுதிசெய்வார்
வாளாய் உரைக்கும் மொழியினை என்றும்! வரிந்தெழுந்தே
ஆளா திருக்குந் தமிழ்த்தாய்க் கரசை அளிக்குமட்டில்
மாளா தெமதுடல்! பூட்கை எடுத்துரை வைத்தனமே!

மேயா தெமதொரு நா!சுவை பார்த்து விரும்பியுண்ண
ஆயா தெதையும் பசியினுக் காக அருந்திவரும்!
தாயாம் தமிழ்க்கே அரசினை மீட்டுத் தரும்வரைக்கும்
ஓயா தெனமுர சார்த்தனம்! கண்கள் உறங்கிலமே!

வீணா பிறப்பு? தமிழர் உலர்ந்த வெறுமணலா?
மாணாப் பகைக்கெதிர் நிற்கும் படையை வழிநடத்திக்
காணாத் தமிழ்நிலம் மீட்கும் வரைக்கும் கழிந்துவரும்
வாணாள் முடியா தெமக்கென் றுரைத்தனம் வஞ்சினமே!

போகா தெமதுயிர்! மூச்சும் அடங்கா! புறம்பழிக்கும்
ஆகா இகலை அழித்தெந் தமிழ்த்தாய் அரசமைக்கா(து)
ஏகா தெமதுடற் கட்டை! எரியில் எரித்திடினும்
வேகா தெனக்கை அடித்துரை செய்தனம் வெஞ்சினமே!

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்.

**அச்சத்தைப் போக்க வேண்டும்.**

நோயின் மூலகாரணம் தெரிந்தபின் அதை அகற்ற மருத்துவர் பாடுபட வேண்டும். வெறுமனே நோயாளியிடம் உங்கள் அச்சம் அறியாமையால் ஏற்பட்டது, அதற்கு அடிப்படையே கிடையாது. அதனால் அச்சத்தை விட்டுத் தள்ளுங்கள் என்று சொல்லிவிட்டால் மட்டும் அந்த அச்சம் நீங்கி விடாது. அதற்கு மாறாக, அவ்வாறு கூறுவதனால் நோயாளி அம் மருத்துவரை விட்டுக் காததூரம் ஓடத்தான் செய்வார். ஆகவே மருத்துவர் நோயாளியின் பிழையான-வேண்டப்படாத அச்ச நினைப்பை நீக்கத் தம் முழுத் திறமையையும் கையாள வேண்டும். தொற்று நோய் பற்றிக் கொள்ளுமோ என்ற ஐயந்தான் அடிப்படை காரணமானால், தொற்று நோய் எவ்வாறு பற்றுகிறது என்பதைப் பற்றி நன்கு விளக்கிக்கூறி, அதுபற்றாதபடி பார்த்துக் கொள்ளுதல் எவ்வளவு எளிது என்பதையும் விளக்கி, நோயாளியின் ஐயத்தைப் போக்க வேண்டும். புணரும் பொழுது பிறர் பார்த்து விடுவார்களோ என்ற அச்சந்தான் மூலகாரணமாயின், கலவி வினை இயற்கையோடு இயைந்தது, இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. கலவி வினையின் போது யாராவது தலையிட்டால் தலையிட்டவர்தான் வெட்கப்பட வேண்டுமேயன்றி, நோயாளி அல்லர் என்பவற்றை எடுத்துக்கூறி, அவ்வச்சத்தை நீக்க வேண்டும். இவ்வாறே பிற காரணங்களால் உண்டாகும் அச்சங்களையும் நீக்க வேண்டும்.

**நம்பிக்கை வேண்டும்.**

இவ்வாறாக நோயாளிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கையை ஊட்டி, அச்சத்தைப் போக்க வேண்டும். இத்துடனேயே மருந்து முறையையும் கைக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் நோயாளியைப் பார்க்கும் பொழுது, நோய் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கி வருகிறது எனக்கூறி, அவரை ஊக்க வேண்டும். எவ்வகைக் காரணம் கொண்டும், நோயாளியிடம் அவர் முற்றிலும் நலமடைந்து விட்டார் என கூறக்கூடாது. இது மிகமிக முதன்மையானதாகும். நோயாளி புணர்ந்து பார்த்து, தன் பழைய அச்சம் நீங்கிற்றா இல்லையா என்பதையும், மறுபடியும் அவர் ஆண்மை பெற்றாரா இல்லையா என்பதையும் அவரே கூறும் படி விட்டு விடவேண்டும். நோயாளியின் எண்ணம் தன் நோயைப் பற்றியே சுற்றிச் சுற்றி வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இந்நோய் பொதுவாக யாருக்கும் வரக்கூடியது. இந்நோய்க்காக மனத்தை அலட்டிக் கொள்ளவோ அல்லது வெட்கப்படவோ

வேண்டியதில்லை. இந்நோயைப் போக்க வழி உண்டு, மருத்துவம் உண்டு என்பவற்றை நன்கு எடுத்துக்கூற வேண்டும். நோயாளி கூடியமட்டும், உடனடியாக, புணர்ச்சியையும், கலவி நினைப்புகளையும், கலவிக் கிளர்ச்சிகளையும் ஒதுக்கி விடும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். ஏன்எனில் புணரும் ஒவ்வொரு முறையும் தோல்வியே; இத்தோல்வி, இந்நோய்பற்றி நினைவு உறுத்திய வண்ணம் இருந்துகொண்டே இருக்கிறது. புணர்ச்சியையும், கலவிக்கிளர்ச்சிகளையும் விட்டு விடுதல் எளிதன்று.

## மனத்தில் நினைவுத்தாக்கம் இருக்கக்கூடாது.

தொடக்கத்தில் சில காலம் வரை நோயாளியின் மனத்தில் இந்நினைப்பே எப்பொழுதும் மேலோங்கி நிற்கும். ஆகவே நோயாளியின் மனம் வேறு எதில் மிக்க நாட்டமுடையது எனத் தெரிந்து அதில் அவர் மனதைத் திருப்பிவிட வேண்டும். சிலருக்கு விளையாட்டில் நாட்டமிருக்கலாம். சிலருக்குக் கலை, சிலருக்கு இசை, சிலருக்கு நூல்கள் பிடிக்கலாம். அந்த அந்த வழிகளில் அவர்கள் மனத்தைத் திருப்பிவிட வேண்டும். கொஞ்ச நாள்களுக்குப்பின் அவர்கள் தங்கள் நினைப்பை ஓரளவு கட்டுப் படுத்தப் பழகிக் கொள்கின்றனர். அவர்கள் மனத்தில் கலவி நினைப்புகள் மூளைந்து நிற்பதில்லை. இந்நிலையில் மருத்துவரின் அறிவுரைகள் கொஞ்சம் கொஞ்சமாக மனத்தில் இடம் பெறுகின்றன.

## உணர்வு மீட்சி!

இவ்வாறு மருத்துவம் செய்து கொண்டிருக்கும் பொழுது, திடீரென ஒரு நாள் நோயாளிக்குத் தன்னை அறியாமலே, கலவி விருப்பமும், ஆண்குறியின் உறுதியான எழுச்சியும் ஏற்பட்டுத் தன் மனைவியை அணுகி எவ்வகைக் கடினமும் இன்றிப் புணர்ந்து முழு இன்பத்தையும் பெற்று மகிழ்கின்றார். அப்பொழுதுதான் அவர் அறிகின்றார், தன் பழைய இயலாமை தன்னிடமிருந்து மறைந்ததை, உடனே ஓடுகிறார் மருத்துவரிடம், இம்மகிழ்ச்சியான செய்தியைக்கூற. மன அலித்தன்மை உடைவர்களுக்கு சில வேளைகளில் மருத்துவர்கள் பலநாள்கள் உட்கொள்வதற்கு வேண்டிய மாத்திரைகளைக் கொடுத்து, அவை தீரும் வரை புணர்ச்சியே கூடாது என அறிவுறுத்துவர். அம் மாத்திரைகளில் எவ்வகை மருந்தும் இல்லாதிருக்கலாம். இருப்பினும் அவற்றைக் கொடுக்கக்காரணம், அவை தீரும் வரை புணர்ச்சியே கூடாது என்ற நினைப்பு நோயாளிக்கு வரவேண்டும் என்பதற்காகத்தான். சிலவேளைகளில் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வரை வரக்கூடிய மாத்திரைகளைக் கொடுப்பார். பாதி அளவு மாத்திரை தீருவதற்கு முன்பாகவே நோயாளிக்குத் தாங்கமுடியாத கலவி விருப்பம் ஏற்பட்டு, புணர்ச்சியில் ஈடுபட்டுவிடுகிறார். பின்

மருத்துவரிடம் வந்து, தலையைச் சொறிந்து கொண்டே, வெட்கத்துடன் மருந்துவரின் சொற்படி நடக்க இயலாமை குறித்து மிக வருந்துவதாகவும், ஆனால் தான் இழந்த ஆண்மையைப் பெற்றுவிட்டதாகவும் தான் முழு வன்மை அடைந்துவிட்டதாகவும், இனி அம்மாத்திரைகள் பயனற்றன எனவும் கூறலாம்.

மனமே காரணம்

இவ்வாறு மருத்துவம் நடந்து கொண்டிருக்கும் பொழுதிருந்தே, நோயின் அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்து, அக்காரணத்தை நோயாளியின் சுற்றுப்புறத்திலிருந்தே அகற்றிவிட முயல்வது மருத்துவரின் முதல் வேலையாகும். ஏன் எனில் அந்தப் பழைய காரணம் நோயாளியின் கண்களுக்குத் தென்பட்டால், நலமான நோய் மறுபடியும் திரும்பலாம். மருத்துவர் நோயாளியின் மனைவியுடன் கலந்துபேசி, மருத்துவம் செய்வதற்கும், நோய் திரும்பாமல் இருப்பதற்கும் நோயாளியுடைய மனைவியின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மன அலித்தன்மைக்கு மருத்துவம் செய்வதில் உளப்பகுப்பு முறையும் பயன்படலாம். இம்முறையால் மன அலித்தன்மை உண்டாக்கும் காரணங்களை நினைவிற்கு அப்பாற்பட்ட மூலங்களைக் கொண்டு கண்டுபிடிக்கலாம். தூக்க முறையும் இவ்வாறே பயன் படுகிறது. தூக்க முறையில் நினைவு தவறுகிறது. அந்நிலையில் கேள்விகள் கேட்கப்படுகின்றன. அப்பொழுது உண்மைக் காரணங்கள் எவ்வகைக் கூச்சமும் தடையுமின்றி வெளிவருகின்றன. அந்தோ! இவ்வளவு நல்ல முறைகள் போலிகளால் அன்றோ கையாளப்படுகின்றன. அதனால் அவை தங்கள் சிறப்பை இழந்து, மக்கள் நம்பிக்கையையும் இழந்து நிற்கின்றன. வல்லவர்களால் தாம் இம்முறைகளைக் கையாள முடியும். ஆகவே இம் முறைகளை இங்கு விளக்கிப் பயன் இல்லை; மேலும் நோயாளி இம்முறைகளைப் பற்றியே அறியாது இருந்தால்தான் நற்பயன்கள் ஏற்படுகின்றன.

தானே உணர்தல்

ஒருவருக்கு மன அலித்தன்மை உள்ளது எனவும், அவருக்கு உளப்பகுப்பு மருத்துவரின் உதவி கிட்ட வழி இல்லை எனவும் கொள்வோம். அப்பேர்ப்பட்டவருக்காகத் தம்முடைய நோயை தாமே ஒரு அளவுக்குச் சரிசெய்து கொள்ளக்கூடிய சில வழிகளை இங்கு கூறுவாம் !

எவ்வகை முகச்சுளிப்பும் இல்லாது உங்களுடைய நோயைப்பற்றி நினைத்துப்பாருங்கள். உங்கள் மனத்தை நோய் பற்றிய நினைப்பு எவ்வளவுதான் குடைந்து கொண்டு இருந்தாலும் சரி, அமைதியாக எண்ணுங்கள். உங்களுக்கு உள்ள நோய் இயற்கையாக யாருக்கும் வரக்கூடியது, நோய் நிலையாகக் குடி கொண்டு இருக்கக் கூடியதன்று. நலமாகக்கூடியது. நினைப்பையும், பழக்க வழக்கங்களையும் சிறிது மாற்றி அமைத்தால் போதும்.

நோய் நலமாகிவிடும் என நினையுங்கள், உடல் நல்ல நிலையில் இருக்கப்பார்த்துக் கொள்ளுங்கள். உள்ளமும், உடலும், உடையும், உணவும், உறையுளும் எங்கும் தூய்மை தாண்டவமாடட்டும். புணர்ச்சி செய்யப் புகுங்கால், எந்த அச்சம் அல்லது தொல்லை, புணர்ச்சி செய்யவிடாது அல்லல் கொடுக்கின்றது என்பதை நினைத்துப்பார்த்து உங்களுக்குள்ளேயே சீர்தூக்கி ஆராயுங்கள். ஆய்ந்து, ஆய்ந்து மனத்தை நிலைப்படுத்தி அச்சத்திற்கும், தொல்லைக்கும் அடிப்படைகளே கிடையா. அவற்றைக்கண்டு நடுங்கவேண்டியதில்லை. அவற்றை மறந்து விடலாம் என்ற முடிவிற்கு வாருங்கள். மதத்தினர் கூறும் ஒழுக்கம் என்ற பேச்சே இங்கு தலைநீட்டவிடக் கூடாது. அவர்கள் கூறும் ஒழுக்கத் திலிருந்து உங்கள் ஆராய்ச்சியின் முடிவு மாறுபட்டிருக்கலாம். அதுபற்றிக் கவலற்க, ஏன்எனில் அவ்வச்சத்தாலும் தொல்லையாலும் நேரக்கூடிய கேடுகள் கணக்கில் அடங்கா, ஆனால் மதத்தினர் கூறும் ஒழுக்கத்தைக் கைவிடுவதால் உண்டாகும் கேடோ மிகச்சிறியது. இப்படி நடக்க வேண்டும் அப்படிச் செய்ய வேண்டும் என்பது பற்றி மிகுந்த நேரம் நினைத்துக் கொண்டிருக்காதீர்கள். அந்த நினைப்பே, நோயை நிலைக்கச் செய்யலாம். உங்களுடைய நோயைப்பற்றி மிக எளிதாக நினையுங்கள். அதை ஒரு கோலி விளையாட்டாகவே கொள்ளுங்கள். உண்மையில் நலமானவுடன் முன்நிலையை நினைக்கும் பொழுது புதுமையாகவே தோன்றும். கலவி வினைகளையும் அவைபற்றிய நினைப்புகளையும் கொஞ்சகாலத்திற்கு விலக்கி வையுங்கள். அஃதாவது புணர்ச்சி இல்லாது உங்களால் முடியாது என்ற நிலை வரும் வரை. இப்படித் தனித்து இருக்கும் காலத்தில் அஃதாவது உங்கள் நோய் நலமாகிவரும் காலத்தில், பால் தொடர்பே வேண்டாம். பொறுத்திருங்கள் பால்உணர்வு உங்களைத் தேடிவரும். உன்னிப்பாய் இருங்கள். இவ்வாறாகப் பல கிழமைகள் கழிந்தபின் மென்மையான, சிறிது காமமூட்டும் மருந்துகளில் ஒன்றை உட்கொள்ளுங்கள். ஆனால் அதற்கு உரிய அளவில் பாதிக்கும் குறைவான அளவிலேயே உட்கொள்ள வேண்டும். மிக்கக்கிளர்ச்சியைத் தூண்டக்கூடியவற்றை உட்கொள்ளக்கூடாது. அவை உடனே உங்களைப் புணர்ச்சி செய்யத்தூண்டும். புணர்ச்சி செய்யும் நிலைக்கு இன்னும் உங்களுக்கு நலமேற்படவில்லை என்பதை மனத்தில் கொள்ள வேண்டும், சிறிது நாள்கள் பயன்படுத்தியும் இந்தக் காமமூட்டிகளால் எவ்வகை முன்னேற்றமும் காணாவிட்டால், அவற்றை நிறுத்திவிட்டு, அதன்பின் முன்னேற்றத்தைக் கணக்கிடுங்கள். உங்களுடைய உடலும், கலவி உறுப்புகளும் நல்ல நிலையிலேயே உள்ளன என்பது எப்பொழுதும் உங்கள் நினைவில்இருக்கவேண்டும். உங்களுடைய கல்வி வினையைத்தூண்டக்கூடிய தூண்டுகோலைத் தான் தற்காலிகமாக இழந்திருக்கிறீர்கள். அந்த இழப்பு, நிலையானதன்று. அந்தத்தூண்டுகோலை எந்த விநாடியும் திரும்பப் பெறலாம்.

(தொடரும்)

# அன்புள்ள நெஞ்சம் ஒன்றின் அகமுருக்கும் ஆர்வ மடல்!

பெருமதிப்பிற்குரிய பெரியவரே,

வணக்கம்.

தங்கள் தென்மொழி நூலை சென்ற காரி கையில் கண்டேன். கவலை நனி கொண்டேன். நீங்கள் எனக்குத் தமிழ் அமுதையூட்டும் தாயாவீர். என் தாய் இப்போது தீராப் பிணியில் உள்ளார். அதற்கு மருந்து வாங்கிக் குணப்படுத்த இயலாத மாணவப் பருவத்தில் நான் உள்ளேன். ஐ(யே)யா! யான் என் செய்வேன்..? இப்போது ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். நான் ஒன்பதாம் வகுப்புப் படிக்கையில் என் தாய், தந்தையர் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். அப்போதும் படிப்பை நிறுத்தாமல் சிற்றுண்டிச் சாலையில் பணி செய்து பள்ளி சென்றேன். இப்போதும் கூட என்னால் ஒன்று செய்ய இயலும். நான் இங்கு ஈரோட்டில் திங்கள் ஒன்றுக்கு உருபா ஐந்து செலவு செய்வது நகரப் பேருந்துக்காக. எனவே அத்தொகையினைத் தங்கள் தமிழ்ப் பெரும் பணிக்குத் திங்கள் தோறும் அனுப்ப முடிவு செய்துள்ளேன் நகரப் பேருந்தில் செல்லாமல் இனி எங்கும் நடந்து செல்வதே என் முடிவு. எனவே தடையின்றி (சொல்லாது) பெறவேண்டும் எனப் பணிவுடன் வேண்டுகிறேன்.

என்போன்று மாணவர் (மாணவி)கள் தங்கள் தமிழ்ப் பெரும் பணிக்கு (இத்தொகையை விட அதிகமாக) உதவி செய்ய முன் வந்தால் அவர்களுக்கு என் அகமுவந்த நன்றியும், பாராட்டும் உரித்தாகுக.

இப்படிக்கு
தங்களன்புள்ள கல்லூரி மாணவன்
கொடுமுடி, பிரகாதாசன்.

ஆசிரியர் குறிப்பு :

பேரன்புள்ள தமிழ்நெஞ்சமே!

நீங்கள் விடுக்க விரும்பும் ஐந்து உருவாவைப் பெறுகிற பொழுதெல்லாம் நீங்கள் வீணே நடந்து செல்லும் காட்சி என் அகக் கண்ணுக்குப் புலப்பட்டு என் நெஞ்சத்தைப் பிழிந்தெடுக்கும். அந்நிலையை நான் எங்ஙன் பொறுத்துக் கொள்வேன்? எனவே அருள் கனிந்து இந்த ஈகத்தை இப்பொழுதைக்குத் தள்ளி வைத்து விட்டு, நன்கு படித்து முன்னேறி ஒரு நல்ல பணி செய்யும் பொழுது, உம்மால் முடிந்ததை உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுவரை, தொகையினை அனுப்ப வேண்டாம் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

உங்கள் அன்பால் உளமகிழ்ந்துள்ள
— பெருஞ்சித்திரன்.

## போலித்தமிழர்! T.5844 — கன்னல். க.மு;கல்.இ.

பார்த்தாலே பல்லிளிப்பார்; பக்கலிலே உள்ளவரை
ஆர்த்த மெய்தழுவி அன்பொழுகப் பேசிடுவார்!
நச்சு நினைவுகளை நாகரிக மாய் மறைத்தே,
அச்சு வெல்லம் போல அகமினிக்கப் பழகிடுவார்!
பரிசுபல நல்கிப் பாராட்டு மழைபொழிவார்!
உரிமையுடன் இணைந்தே ஒன்றுனர் போலிருப்பார்!
இட்டபணி முடிக்க இன்னுயிரை ஈகின்றேன்;
கட்டளைகள் இடுங்களென்பார் கண்ணசைவே
போதுமென்பார்!
வெட்டி முறிப்பதுபோல் விளம்பரங்கள் செய்திடுவார்!
எட்டிக் காய் மாந்தர் இனத்தமிழர் கலப்படங்கள்!
களங்காணத் துடிப்பவர்போல் கதைத்துச் சிலிர்த்தெழுவார்!
விளம்பர மாந்தர்இவர்; வெளிப்புனைந்த பேடியர்கள்!
குயிலின் இன்னிசையைக் கோட்டான்கள் மறைக்கும்வரை,
பயிலும் தமிழினத்தார் பட்டினியில் ஏன்கருகார்?
வான்கோழி ஆடுகின்ற வழக்கம் தொடரும்வரை,
தேன்தமிழர் ஒன்றுபட்டுத் திருநாடா அமைத்திடுவார்?
வயிற்றில் இருந்துபிள்ளை வழுக்கி விழுவதுபோல்,
பயிற்றிப் பலவுரைப்பார்! பைந்தமிழர்ப் போலி யடா!

---

## ஐயா அவர்களுக்கு நல்வாழ்த்துகள்!

இத்தரையோர் நெஞ்ச இருளனைத்தும் ஓட்ட க.
நித்தமும் தூங்காமல் நீக்கமற-முத்தமிழை
எக்கணமும் காக்கும் எழில்பெருஞ் சித்திரரே!
மிக்கநலஞ் சேர்வீர் மகிழ்ந்து!
சாதிமதம் என்றகொடுஞ் சாக்காட்டில் வீழ்வார்க்கு உ.
சேதிபல சொல்லிச் செழுந்தமிழைத்-தீதின்றி
எந்நாளும் காக்க எழும்பரிதிப் பாவலரே
எந்நாளும் வாழ்வீர் இனிது.
நாடு மொழியென்று நற்கனிச் சாறதனைப் ௩.
பீடுடன் தந்த பெரும்பா வலரேறே
வாடும் தமிழினத்தார் வாட்ட மகற்றிடவே
ஈடறத் தொண்டுசெய்வீர் ஏற்று!
நாட்டில் இழிநிலைகள் நாளும் பெருகிவர ச.
வாட்டம் பலவுற்று வாழ்விக்க!-நாட்டரங்கில்
ஆடும் அரவாம்தீ ஆரியரின் பொய்யகலப்
பாடுவீர் நற்புரட்சிப் பா!
இருபத்தோ டைந்தாண்டாய் இன்தமிழைக் காத்திடவே ரு.
பெருந்துன்பில் சிக்குண்டு பண்பாய்-இருளொழித்து
மெய்ப்பெருஞ் சித்திரரே! மேதினியோர் போற்றிடவே
பொய்யறுத்துச் சேர்வீர் புகழ்!

— தாழை. ந. இளவழகன். மணப்பாறை.

குணம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள பகுதியில் கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகளை என்மீது ஏற்றிக் கூறியுள்ளீர்.

1. காட்டிக் கொடுக்கும் கயமைக்குணம்.
2. பனிமலைப் பதியனை ஒரு 'பிராமண துவேசி' என்றது.
3. அவரால் ஆளுமைக்குக் கேடுவரும் என்றது.
4. அவரைப் பணியில் வைத்திருக்கக் கூடாது என்றது.
5. இன்னும் பலவகையான கோளுரைகள் எழுதியனுப்பியது.
6. அவர்மேல் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டியுள்ளது.
7. அகராதிப் பேராசிரியர் இன்னும் அடங்காமை மேற்கொண்டது.

என்னை ஆரிருளில் உய்த்துவிடுவதாக நீர் கூறுவது என்னை உயிர்க்கொலை செய்வதாக மிரட்டுவதாகும். ஏற்கனவே பாரீசில் கொலைமிரட்டல் செய்துள்ளீர்.

மேலும், நீர் அதே இதழின் அட்டையில் பூண்டி மறவன் என்பவர் எழுதிய 'பேராசை பிடித்த பேராசிரியர் என்ற தொடர் பொருந்திய மடலை வெளியிட்டதும் அவதூறாகும்.

நீர் பொய்யுரையாக மேற்கண்டவற்றை வெளியிட்டதற்காக இம்மடல் கிடைத்த பத்துநாட்களுக்குள் விளக்கம் அனுப்பா தொழிவீராயின் உம்மீது குற்றவழக்குத் தொடரப்படும் என்பதை அறியவும். — ..... தமிழ்ப்பேராசிரியர், ஈரோடு-16

0: 994: அன்புத்திரு ஐயா அவர்களுக்கு, வணக்கம். சென்ற 14-1-84 மாலை 7 மணி அளவில் ஈரோட்டில் திரு......... ...... அச்சகத்தில் அந்தப் பேராசிரியர்....... யை நம் முத்துக்குமரனும் துரையரசனும், நானும் சந்தித்தோம். $1\frac{1}{2}$ மணிநேரம் மிக வெளிப் படையாகப் பேசினோம். திரு.........வும் உடனிருந்தார்.

'அறிவாளி' என்று தங்களால் எங்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்ட அவர்,

1. பெரும் கோழை 2. பொறுப்பே அற்றவர் 3. பெரும் பொறுமையுடையவர் 4. பெரும் பொய்யர் 5. பெரும் அறிவிலி 6. மலிவான பிறர்கையாள் என்பன எல்லாம் ஒருசேரப்பெற்றவர் என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்திவிட்டார். தங்களைக் குறித்த அவரது கூற்றுகளும் எழுத்துகளும் 'எள்மூக்கத்தனையும்' உண்மையன்று. அதைவிட அவற்றிற்குப் பொறுப்பேற்கக்கூட அவரால் இயலாமற்போனதுதான் பெரும் 'கேவல'மாகவும், மிக வியப்பாகவும் இருக்கிறது.

சிறிதே குறையுள்ள தங்களைத் திருத்துவதற்காகத்தான் அவர் அவ்விதமெல்லாம் எழுதினாராம்; கூறினாராம் - இதுதான் அவரது (திரும்பத் திரும்பக் கூறும்) விடை.

திரு .......... அவர்கள்கூட அவர் கூறியன, எழுதியன எதுவுமே உண்மையில்லையே, அப்படிச் செய்தது சிறிதும் சரி யில்லையே, எழுதியிருக்கக்கூடாது என்று அவரிடம் எங்கள் முன் னிலையில் கூறினர். மேலும் அவர் பேரில் மான ஈட்டுத்தொகை 3 இலக்கத்திற்குத் தாங்கள் வழக்குத் தொடர்ந்திருப்பதாக அவர் கூறினர். அவ்வழக்குத் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமென் பதும், எவர் பரிந்துரைகள் வரினும் வழக்கை விட்டுவிடக் கூடாது என்பதும் எங்கள் கருத்து. அப்போதுதான் இவர் போல் கோழைகள் சிலரைப் பின் நின்று இயக்கும் சிலர் அறிவும் தெளிவும் பெற்றுத் திருந்தல் கூடும். பிறபின் வணக்கம்,

— மா. ஆறுமுகம், பல்லடம்.

0: 995: ஐயா வணக்கம்! விழி நனைய வியந்து படித்தேன், தென்மொழி! பழிமேவும் 'பண்பாளர்' யாரென அறியாது மயங்கினேன்; கழிவிரக்கம் கொண்டு கலங்கினேன். இனங்கண்டு கொள்ளத் துடித்தேன். 'சிவவேடங்' காட்டி நயவஞ்சம் புரிந்த தத்தனும் இல்லை. ஏனெனில் அவன் நன்மை பொறுது தீமை செய்தவன். காந்தியடிகளைக் கொன்ற கோட்சேவும் அல்லன்; ஏனெனில் அவன் பழி தீர்த்த 'பாதகன்', கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்த ஊமைத்துரையும் அல்லன்; ஏனெனில் அவன் பொருளாசையால் காட்டிக் கொடுத்தான். ஏசுநாதரைக் காட்டிக் கொடுத்த மாணவனுமில்லை. ஏனெனில் அவன் ஏறியபின் ஏணியை எட்டி உதைக்கும் பண்பாளன். ஆனல்! தங்களுடன் இருந்து தன்னலம் கண்டு திரும்பியபின், பின்னல் பிதற்றித் திரியும் பித்தனை அடையாளம் தெரியாது விழித்தேன். பசுத்தோல் போர்த்திய புலியில்லை; புலித்தோல் போர்த்திய 'பசு'வும் இல்லை. அரிமா உறங்கியபோது அதன்மேல் ஏறித் துள்ளி விளையாடிய சுண்டெலியும் அன்று எண்ணி எண்ணிப் பார்த்து இனங்கண்டு கொண்டேன், தெளிந்தேன். ஆற்றல் பெற்ற அரிமாவின் அருகில் இருந்தாலும், அதைவிட்டு விலகி இருக்கும் போது அதன் தனி இயல்பு மாறுது. அது தின்னும் பொருளைத் தின்றே தீரும். -- நற்றிணை, சென்னை

0: 996: என் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய தமிழ்க் காவலராயுள்ள அன்புசால் பெரியீர், வணக்கம். பல்லாண்டுகளாகத் தமிழுக்காகவும், தமிழருக்காகவும் ஈகவுணர்வு கொண்டு அரும்பணியாற்றிவந்த தாங்கள் பொருளியலில் தாழ்ச்சியுற்றுள்ளதைக் கண்டு உளம் நொந்தேன். தமிழ் நாட்டில் தமிழ்த் தொண்டாற்றிய பலர் துன்புற்றதை அடியேன் அறிவேன். இத்தகைய தொண்டுள்ளம் கொண்டோருக்குத் தக்க ஆதரவு அளித்தற்கு மக்களுக்கு உளம் இல்லாதிருக்கிறது. ஆடம்பர ஆரவாரச் செலவுகள் செய்வதில் மக்களுக்கு ஊக்கம் பிறக்கிறது. பயனுள்ள செலவுகள் செய்வதில் நாட்டமில்லை.

ஆதலால் அடியேன் உரூ 200!-க்கு ஒரு காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். இதனைத் தங்களுக்கு அடியேனின் அன்பளிப்பாக அனுப்பியுள்ளேன். இதனைத் தாளிகைகளில் விளம்பரம் செய்ய வேண்டாமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அடியேனும் தொண்டு காரணமாகப் பெரும் கடன் பட்டுள்ளதால் இதனைச் சொல்ல விழைகிறேன்.

தங்கள் அன்புள்ள, — ஒரு நல்ல உள்ளம், புதுக்கோட்டை.

0: 997: மதிப்பிற்குரிய ஐயா பெருஞ்சித்திரனர் அவர்களுக்கு வணக்கம். தங்கள் பணி உலகெங்கும் பரவி இருக்கிறது. தங்களின் உ.த.மு.க; புதிய முனைப்பில் செயல்படத் தொடங்கி இருக்கின்றது. தாங்கள் விதைத்த விதை வேறுபல வழிகளில் பலன் கொடுத்துக் கொண்டிருந்தாலும், தங்களின் இயக்கம் எதிர்காலத்தில் நல்ல விளைவுகளை உண்டாக்குமென உறுதியாய் எண்ணுகிறேன். எப்படியாயினும் தாங்கள் இடுகின்றகட்டளைகளைச் செயல்படுத்த என்போன்ற தொண்டர்கள் என்றைக்கும் அணியமாக இருக்கின்றோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே தங்கள் பணி சிறக்கவேண்டும். 'தென்மொழி' இதழ் தொடர்ந்து வெளிவந்து என்போன்ற தமிழ் உள்ளங்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, சத்தியநாதன், திண்டுக்கல்

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (கழிமகம்)